بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 10

இதழ் 13

ஆசிரியர்
முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர்
அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா
ரூபாய் 600/-

ஹிஜ்ரீ கமரீ 1446 - ரமலான் 27 ★ ஹிஜ்ரீ ஷம்ஸி 1404 - அமான் 27 ★ 27 மார்ச் 2025


## அல்லாஹ்வின் கட்டளை

یٰۤاَیُّہَا الَّذِیۡنَ اٰمَنُوۡا کُتِبَ عَلَیۡکُمُ الصِّیَامُ کَمَا کُتِبَ عَلَی الَّذِیۡنَ مِنۡ قَبۡلِکُمۡ لَعَلَّکُمۡ تَتَّقُوۡنَ ۝

**பொருள்**

நம்பிக்கை கொண்டவர்களே! உங்கள் முன்னோருக்கு நோன்பு கடமையாக்கப்பட்டது போன்று உங்களுக்கும் அது கடமையாக்கப்பட்டுள்ளது. இதனால் நீங்கள் இறையச்சமுள்ளவர் ஆகலாம்.

(அல்பக்கரா: 184)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**துஆ செய்பவர் என்னை அழைக்கின்றபோது நான் அவரது அழைப்பிற்கு பதில் அளிக்கின்றேன்; அவர் நேர்வழி பெரும் பொருட்டு அவரும் எனது கூற்றை ஒப்புக் கொள்ள வேண்டும்; மேலும் என் மீது ஈமான் கொள்ள வேண்டும்**

## இறை வசனம்

وَاِذَا سَاَلَکَ عِبَادِیۡ عَنِّیۡ فَاِنِّیۡ قَرِیۡبٌ ؕ اُجِیۡبُ دَعۡوَۃَ الدَّاعِ اِذَا دَعَانِ ۙ فَلۡیَسۡتَجِیۡبُوۡا لِیۡ وَلۡیُؤۡمِنُوۡا بِیۡ لَعَلَّہُمۡ یَرۡشُدُوۡنَ ﴿۱۸۷﴾ اُحِلَّ لَکُمۡ لَیۡلَۃَ الصِّیَامِ الرَّفَثُ اِلٰی نِسَآئِکُمۡ ؕ ہُنَّ لِبَاسٌ لَّکُمۡ وَاَنۡتُمۡ لِبَاسٌ لَّہُنَّ ؕ عَلِمَ اللّٰہُ اَنَّکُمۡ کُنۡتُمۡ تَخۡتَانُوۡنَ اَنۡفُسَکُمۡ فَتَابَ عَلَیۡکُمۡ وَعَفَا عَنۡکُمۡ ۚ فَالۡـٰٔنَ بَاشِرُوۡہُنَّ وَابۡتَغُوۡا مَا کَتَبَ اللّٰہُ لَکُمۡ ۪ وَکُلُوۡا وَاشۡرَبُوۡا حَتّٰی یَتَبَیَّنَ لَکُمُ الۡخَیۡطُ الۡاَبۡیَضُ مِنَ الۡخَیۡطِ الۡاَسۡوَدِ مِنَ الۡفَجۡرِ ۪ ثُمَّ اَتِمُّوا الصِّیَامَ اِلَی الَّیۡلِ ۚ وَلَا تُبَاشِرُوۡہُنَّ وَاَنۡتُمۡ عٰکِفُوۡنَ ۙ فِی الۡمَسٰجِدِ ؕ تِلۡکَ حُدُوۡدُ اللّٰہِ فَلَا تَقۡرَبُوۡہَا ؕ کَذٰلِکَ یُبَیِّنُ اللّٰہُ اٰیٰتِہٖ لِلنَّاسِ لَعَلَّہُمۡ یَتَّقُوۡنَ ﴿۱۸۸﴾

பொருள்:

(தூதரே!) என்னடியார்கள் உம்மிடம் என்னைப் பற்றிக் கேட்டால், நான் அருகில் இருக்கின்றேன்; பிரார்த்தனை செய்கிறவர் என்னை அழைக்கின்றபோது, நான் அவருடைய பிரார்த்தனையை ஏற்றுக் கொள்கிறேன். எனவே அவர்களும் என் கட்டளையினை ஏற்றுக் கொண்டு என்னிடம் நம்பிக்கை கொள்ள வேண்டும். இதனால் அவர்கள் நேர்வழி பெறுவார்கள் (என்று பதில் அளிப்பீராக!).

நோன்பின் இரவுகளில் உங்கள் மனைவியர்களிடம் செல்வதற்கு உங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. அவர்கள் உங்களுக்கு ஆடையாகவும், நீங்கள் அவர்களுக்கு ஆடையாகவும் இருக்கின்றீர்கள். உங்கள் உரிமையை நீங்களே பறித்துக் கொண்டிருந்ததை அல்லாஹ் அறிவான். ஆகவே அவன் உங்களிடத்து கருணை காட்டி உங்களை (அந்நிலையிலிருந்து) சீர்திருத்தி விட்டான். எனவே இப்பொழுது நீங்கள் (தயக்கமின்றி) அவர்களிடம் சென்று அல்லாஹ் உங்களுக்கு விதித்திருப்பதைத் தேடிக் கொள்ளுங்கள். இருள் விலகி, விடியலின் வெண்கதிர்கள் உங்களுக்கு தெரியும் வரை நீங்கள் உண்ணுங்கள்; குடியுங்கள். பின்னர் இரவு வரை நோன்பை முழுமையாக்குங்கள்.நீங்கள் வழிபாட்டிற்காகப் பள்ளிவாயில்களில் தங்கி (இஃதிகாப்பில்) தனித்திருக்கும்போது (மனைவியர்களாகிய) அவர்களிடம் செல்லாதீர்கள். இவை அல்லாஹ் விதித்த வரம்புகளாகும். எனவே நீங்கள் அவற்றினை (மீறுவதற்காக) நெருங்காதீர்கள். மக்கள் தீங்குகளிலிருந்து தங்களைக் காத்துக் கொள்வதற்காக அல்லாஹ் தனது கட்டளைகளை இவ்வாறு அவர்களுக்கு விளக்குகிறான். (அல்பக்கரா: 187- 188)

## நபிமொழி
### நோன்பு கேடயமாகும்

عَنۡ اَبِیۡ ہُرَیۡرَۃَ رَضِیَ اللّٰہُ عَنۡہُ قَالَ : قَالَ رَسُوۡلُ اللّٰہِ صَلَّی اللّٰہُ عَلَیۡہِ وَسَلَّمَ : قَالَ اللّٰہُ عَزَّ وَجَلَّ : کُلُّ عَمَلِ بۡنِ اٰدَمَ لَہٗ اِلَّا الصِّیَامَ فَاِنَّہٗ لِیۡ وَاَنَا اَجۡزِیۡ بِہٖ ۔ وَالصِّیَامُ جُنَّۃٌ فَاِذَا کَانَ یَوۡمُ صَوۡمِ اَحَدِکُمۡ فَلَا یَرۡفُثۡ وَلَا یَصۡخَبۡ فَاِنۡ سَابَّہٗ اَحَدٌ اَوۡ قَاتَلَہٗ فَلۡیَقُلۡ : اِنِّیۡ صَآئِمٌ ۔ وَالَّذِیۡ نَفۡسُ مُحَمَّدٍ بِیَدِہٖ لَخُلُوۡفُ فَمِ الصَّآئِمِ اَطۡیَبُ عِنۡدَ اللّٰہِ مِنۡ رِیۡحِ الۡمِسۡکِ ۔ لِلصَّآئِمِ فَرۡحَتَانِ یَفۡرَحُہُمَا ، اِذَا اَفۡطَرَ فَرِحَ ، وَاِذَا لَقِیَ رَبَّہٗ فَرِحَ بِصَوۡمِہٖ ۔

هَلۡ یَقُوۡلُ اِنِّیۡ صَائِمٌ اِذَا شُتِمَ

பொருள்: ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) கூறினார்கள்:

அல்லாஹ் கூறுகின்றான்: மனிதனுடைய எல்லா காரியங்களும் அவனுக்குரியதாகும்; ஆனால் நோன்பு எனக்கானது ஆகும்; மேலும் நான் சுயமே அதற்கான கூலியாக இருப்பேன். அதாவது அவனுடைய இந்த நன்மைக்கு பகரமாக நான் எனது தரிசனத்தை அவனுக்கு அருளுவேன்; நோன்பு கேடயமாகும் என்று அல்லாஹ் கூறுகின்றான்.

எனவே உங்களில் எவர் நோன்பு நோற்பாரோ அவர் வீணானவற்றிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும்; மேலும் தீமைகளிலும் ஈடுபடக் கூடாது. ஒருவேளை அவரிடம் எவராவது சண்டையிட்டு ஏசிபேசினால் பின்னர் நான் நோன்பாளி ஆவேன் என்று அவர் பதில் அளிக்கட்டும்.

எந்த இறைவனின் கரத்தில் முஹம்மது (ஸல்) அவர்களின் உயிர் உள்ளதோ அந்த இறைவன் மீது ஆணையாக! நோன்பாளியின் வாய் துர்நாற்றம் அல்லாஹ்விடத்தில் கஸ்தூரியை விடவும் மிகவும் நறுமணம் கொண்டதாகும். ஏனெனில், அவர் தனது இந்த நிலையை இறைவனுக்காக ஆக்கிக் கொண்டுள்ளார். நோன்பாளிக்கு இரண்டு மகிழ்ச்சிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. ஒரு மகிழ்ச்சி, அவர் நோன்பு திறக்கும்போது அவருக்கு கிடைக்கின்றது. மற்றொன்று, அவர் நோன்பின் காரணமாக அவருக்கு அல்லாஹ்வை சந்திக்க சந்தர்ப்பம் கிடைக்கும் போது ஏற்படுகின்றது.

(புகாரி, பாடம் - நோன்பு)

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்று

**இந்த மாதம் உள்ளத்தை ஒளிமயமாக்குவதற்கு சிறந்த மாதம் ஆகும். இந்த மாதத்தில் அதிகமாக ஆன்மிக காட்சி கிடைக்கின்றது. தொழுகை உள்ளத்தை பரிசுத்தப்படுகின்றது; மேலும் நோன்பு உள்ளத்தை ஒளிமயமாக்குகின்றது**

மக்ரிப் தொழுகைக்கு சில நிமிடங்களுக்கு முன்னர் ரமலான் மாதத்தின் பிறை பார்க்கப்பட்டது. ஹுஸூர் அன்வர் (அலை) அவர்கள் மக்ரிப் தொழுகையை முடித்து விட்டு மஸ்ஜிதுடைய மேல்தளத்திற்கு பிறையை பார்ப்பதற்காக சென்றார்கள். மேலும், பிறையைப் பார்த்த பிறகு மஸ்ஜிதிற்கு வருகை தந்தார்கள்.

கூறினார்கள்:

கடந்த வருட ரமலான் நேற்று கழிந்தது போன்று இருக்கின்றது.

இதன் தொடர்ச்சி 8-ம் பக்கம்.....

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஃஹைபர் போரின் பின்னணியில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு**
**&**
**மதிப்பிற்குரிய மாஸ்டர் மன்ஸூர் அஹ்மது ஸாஹிப் மர்ஹூம் அவர்களின் நற்குறிப்பும் ஜனாஸா காயிப் தொழுகையும்**

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்க்கையோ ஒரு திறந்த புத்தகத்தைப் போன்று அனைவருக்கும் முன்பும் இருந்தது. எந்த மாமனிதர் போர் துவங்குவதற்கு முன்பு அனைவருக்கும் இவ்வாறு கட்டளையிட்டார்கள்: அதாவது எச்சரிக்கை! எந்தக் குழந்தையையும் கொல்லக் கூடாது; எந்தப் பெண்ணையும் கொல்லக் கூடாது; காரணமின்றி மரங்களைக் கூட வெட்டக் கூடாது எவர் விலங்குகளைக் கூட எந்த இன்னலிலும் பார்க்க விரும்பவில்லையோ அவர் மனிதர்கள் மீது எப்படி அநீதியும் அக்கிரமும் இழைக்க முடியும்?

ஓர் அறிவிப்பில் வருகிறது. அம்பு பட்டதனால் பெருமானார் (ஸல்) அவர்கள் காயமடைந்து விட்டார்கள். அம்பு பட்டதனால் அன்னாரது ஆடை கிழிந்து விட்டது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அம்பை வெளியே எடுத்தார்கள். பிறகு, அன்னார் ஒரு கை நிறைய கூழாங்கற்களை எடுத்து அந்தக் கோட்டை பக்கம் வீசி விட்டார்கள். அதனால், அவர்களுடைய கோட்டை ஆட்டம் காண ஆரம்பித்து விட்டது. எதுவரை என்றால், முஸ்லிம்கள் யூதர்களைப் பிடித்து விட்டார்கள். பிறகு கைப்பற்றி விட்டார்கள்

கினானா பின் ரபீஃ கொலை செய்யப்பட்டான். அவனது கொலைக்கான காரணம் அவன் ஒரு முஸ்லிம் போர்வீரரைக் கொலை செய்திருந்தான். அதற்கு பழிவாங்கும் விதமாக அவனும் கொலை செய்யப்பட்டான். ஆக, இதுதான் அசல் உண்மையாகும்

## ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 14 பிப்ரவரி 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **தப்லீஃக்** மாதம் **14 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

ஃஹைபர் போர் பற்றிக் கூறிக் கொண்டிருந்தேன். இப்பொழுது ஃஹைபரின் இரண்டாவது கோட்டை வெற்றி காணப்பட்டது பற்றி கூறுவேன். இந்த இரண்டாவது கோட்டை ஸஃது பின் முஆஸ் கோட்டை எனப்படுகிறது. இந்தக் கோட்டையில் ஃஹைபரின் மற்ற அனைத்துக் கோட்டைகளைக் காட்டிலும் உணவு, கால்நடைகள் மற்றும் பொருள் செல்வங்கள் இருந்தன. இதில் 500 போர் வீரர்களும் இருந்தனர்.

ஹஸ்ரத் கஅப் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அவர்கள் மூன்று நாள்கள் வரை ஸஃது பின் முஆஸ் கோட்டையை முற்றுகையிட்டிருந்தார்கள். இது ஒரு வலுவான கோட்டையாக இருந்தது. ஹஸ்ரத் முஃதிப் அஸ்லமீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அஸ்லம் கோத்திரத்தினர் ஃஹைபரில் கடுமையான பசியை எதிர்கொள்ள வேண்டி வந்தது. அஸ்லம் கோத்திரத்தினர் ஹஸ்ரத் அஸ்லமா பின் ஹாரிஸாவை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மேலான சமூகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என ஒரு மனதாக முடிவெடுத்தார்கள்.

அஸ்லம் கோத்திரத்தினர் ஹஸ்ரத் அஸ்மா பின் ஹாரிஸா (ரலி) அவர்களிடம், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எங்கள் ஸலாத்தை எட்ட வைப்பீராக. நம்மைப் பசியும், பலவீனமும் ஆட்கொண்டு விட்டன; நிலைமை மிகவும் மோசமாக உள்ளது என்றும் பணிவுடன் கூறுவீராக! என்று கூறினார்கள். ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு அஸ்லம் கோத்திரத்தினரின் ஸலாத்தை முன் வைத்தார்கள். மேலும் பசியும், பலவீனமும் எங்களை மிகவும் கவலைக்குள்ளாக்கி வைத்திருக்கிறன; எனவே எங்களுக்காக அல்லாஹ்விடம் துஆ செய்யுங்கள் என்று ஹுஸூர் (ஸல்) அவர்களிடம் பணிவுடன் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் துஆ செய்தார்கள். பிறகு, இவ்வாறு கூறினார்கள்: எவன் கையில் எனது உயிர் இருக்கிறதோ அவன் மீது ஆணையாக! நான் உங்களுக்கு பலம்சேர்த்திட என்னிடம் எதுவும் இல்லை; என்னிடம் உண்பதற்கு எதுவும் இல்லை; இப்பொழுது பசியால் வாடியுள்ள அந்த மக்களின் நிலையை நான் புரிகிறேன்.

பிறகு, இவ்வாறு துஆ செய்தார்கள்: அல்லாஹ்வே! உணவும், கொழுப்பும் நிறைந்துள்ள அந்தக் கோட்டையை அவர்களுக்காக வெற்றி காணச் செய்வாயாக!

பிறகு, பெருமானார் (ஸல்) அவர்கள் போருக்காக ஹுப்பாப் பின் முன்ஸிர் (ரலி) அவர்களிடம் கொடியை ஒப்படைத்தார்கள். இதன் விபரத்தில் இவ்வாறு கூறப்படுகிறது.

யூதர்களில் ஒருவன் ஒற்றையாகப் போர் புரிவதற்காக - எதிருக்கு எதிர் மோதுவதற்காக வெளியே வந்தான். அவன் பெயர் யூஷஃப் ஆகும். அவன் சண்டையிடக் கூவி அழைத்தான். எனவே உடனடியாக ஹஸ்ரத் ஹுப்பாப் பின் முன்ஸிர் (ரலி) அவர்கள் அவனை எதிர்த்துப் போரிட வந்தார்கள். அவர்கள் சண்டையிட்டுக் கொண்டே இருந்தார்கள். எதுவரை என்றால், ஹஸ்ரத் ஹுப்பாப் (ரலி) அவர்கள் அவனைக் கொன்று விட்டார்கள்.

பிறகு, ஸியால் எனும் யூதன் ஒற்றையாகப் போர் புரிய அழைத்தான். அப்பொழுது ஹஸ்ரத் அம்மாரா பின் உக்பா ஃகஃப்பாரீ (ரலி) அவர்கள் அவனை எதிர்கொள்ள புறப்பட்டார்கள். முன்னே சென்று அந்த யூதனின் தலையில் ஆழமாக வாள் வீசினார்கள். அதனால் அவன் தலை உடைந்து விட்டது. இதோ! நான் ஃகஃப்பாரீ இளைஞன் ஆவேன்! என்று ஹஸ்ரத் அம்மாரா பின் உக்பா ஃகஃப்பாரீ (ரலி) அவர்கள் கூறினார்கள்.

அதற்கு ஸஹாபா பெருமக்கள் (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) இவரது ஜிஹாது பொய்யாகி விட்டது என்று கூறினார்கள். அதாவது இவர்கள் அந்த நேரத்தில் இவ்வாறு சமுதாய முழக்கமிட்டார்கள். நான் ஃகஃப்பாரீ ஆவேன் என்று பெருமிதத்தை வெளிப்படுத்தினார்கள். ஸஹாபா பெருமக்கள் நீ பெருமையை எடுத்துரைத்தாய்; இதுவோ நல்ல விஷயம் இல்லை எனக் கூறினார்கள். இந்த விஷயம் மாநபி (ஸல்) அவர்களின் மேலான சமூகத்தில் பணிவுடன் எடுத்துரைக்கப்பட்ட போது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பரவாயில்லை ; அவருக்கு நற்கூலி கிடைக்கும் ; புகழும் பாடுவார் எனக் கூறினார்கள். இது போன்ற தருணத்தில் இப்படி செய்துவிட்டால் பரவாயில்லை.

ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அம்பு எய்து கொண்டிருக்கக் கண்டேன். அன்னாரது ஒரு குறி கூட தப்பவில்லை. அன்னார் (ஸல்) என் பக்கம் பார்த்து புன்சிரித்தார்கள். ஹஸ்ரத் ஹுப்பாப் பின் முன்ஸிர் (ரலி) அவர்கள் தம் இளைஞர்களுடன் சேர்ந்து கோட்டைக்குள் நுழைந்து கடுமையாகப் போர் புரிந்து அதை வெற்றி கொண்டு விட்டார்கள். எல்லா ஆயுதங்களையும், தானியங்களையும் கைப்பற்றிக் கொண்டார்கள். கோட்டையைப் பாதுகாத்துக் கொண்டிருந்த யூதர்கள் பலர் கொல்லப்பட்டனர். பலர் சிறைபிடிக்கப்பட்டனர்.

பசியின் காரணமாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் துஆவிற்காக விண்ணப்பிக்க வந்திருந்த ஹஸ்ரத் முஃதீப் அஸ்லமீ (ரலி) அவர்கள்

கூறுகிறார்கள்: நாங்கள் திரும்பி கூட வந்திருக்கவில்லை. அதற்குள் மேலான அல்லாஹ் ஸஃது பின் முஆஸ் கோட்டையை வெற்றி காணச் செய்தான்.

அதாவது, நாங்கள் பேசி விட்டு திரும்பிதான் வந்து கொண்டிருந்தோம். பசியால் நிலைமை மோசமாகிறது என ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் விண்ணப்பித்துவிட்டுத் திரும்பிதான் வந்து கொண்டிருந்தோம். இதற்கிடையில் போர் துவங்கியது. வெற்றியும் கிடைத்து விட்டது.

ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஸஃது கோட்டையில் இருந்து கிடைத்த உணவுப் பொருள் எந்த அளவுக்கு இருந்தது என்றால், வேறு எந்தக் கோட்டையில் இருந்தும் அவ்வளவு பொருள் கிடைக்கவில்லை.

அதில் நிறைய கோதுமை, பேரீத்தம் பழங்கள், நெய், தேன், எண்ணெய் மற்றும் கொழுப்பு ஆகியவை இருந்தன. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அறிவிப்பு செய்பவர் இவ்வாறு அறிவிப்பு செய்தார்: நீங்கள் தானும் உண்ணுங்கள். உங்கள் விலங்குகளுக்கும் உண்ணக் கொடுங்கள். எதையும் எடுத்துச் செல்லக் கூடாது. எவ்வளவு உண்ண வேண்டுமோ இங்கேயே உண்ணுங்கள்.

பிறகு, மூன்றாவது கோட்டை பற்றி வருகிறது. இது ஸுபைர் பின் அவ்வாம் கோட்டை ஆகும். இதன் வெற்றி பற்றிய குறிப்பு இவ்வாறு கிடைக்கிறது. இந்தக் கோட்டையின் பெயர் குல்லா என்று இருந்தது. இது பின்னர் ஹஸ்ரத் ஸுபைர் பின் அவ்வாம் (ரலி) அவர்களின் பங்கில் வந்தது. இதனால் இது ஸுபைர் கோட்டை என்ற பெயரால் பிரசித்தி பெற்றது.

யூதர்கள் நாயிம் மற்றும் ஸஃது பின் முஆஸ் கோட்டையிலிருந்து ஸுபைர் பின் அவ்வாம் கோட்டையை நோக்கி ஓடியபோது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவர்களை முற்றுகையிட்டார்கள். இந்தக் கோட்டை மலை உச்சியில் இருந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் அதை மூன்று நாள்கள் முற்றுகையிட்டு வைத்திருந்தார்கள். ஃகஸ்ஸால் என்ற பெயரைக் கொண்ட யூதர் ஒருவர் வந்தார். அவர் அபுல் காஸிம் அவர்களே! என்று கூறினார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பார்த்து கூறினார். முஸ்லிம் அல்லாதவர்கள் இந்த சுட்டுப் பெயரை வைத்தே அழைத்து வந்தனர்.

அதாவது, தாங்கள் எனக்கு உயிருக்கு உத்திரவாதம் அளித்திடுங்கள். அதற்கு நிபந்தனையாக தாங்கள் நதாஹ் மக்கள் விஷயத்தில் நிம்மதியடையக் கூடிய ஒரு விஷயத்தை நான் தங்களுக்கு கூறுவேன். அதாவது தங்களால் அந்தக் கோட்டையைக் கைப்பற்ற முடியும். தாங்கள் ஷக் மக்களை நோக்கி புறப்பட முடியும். நிச்சயமாக ஷக் மக்கள் தங்கள் மீதான மதிப்பச்சத்தினால் அழிந்து போய் விட்டார்கள். இதற்குப் பிறகு, தாங்கள் மற்ற கோட்டைகளை நோக்கிச் செல்லலாம் என்று கூறினார்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவருடைய மனைவி மக்கள், அவருடைய செல்வங்கள் ஆகியவற்றில் அவருக்கு உத்திரவாதம் அளித்து விட்டார்கள்.


அந்த யூதர் இவ்வாறு கூறினார்: தாங்கள் இப்படியே ஒரு மாதம் நின்று கொண்டிருந்தாலும் சரி; அவர்கள் அதைப் பொருட்படுத்த மாட்டார்கள். அவர்களது நிலத்தின் கீழ் சுரங்கப் பாதைகள் உள்ளன. அவர்கள் இரவில் வெளியே வருவார்கள். அதன் மூலமாக தண்ணீர் கொண்டு செல்வார்கள். பிறகு தத்தமது கோட்டைகள் பக்கம் திரும்பிச் சென்று விடுவார்கள். அவர்கள் உங்களிடமிருந்து தங்களை தற்காத்துக் கொள்கிறார்கள். தாங்கள் அவர்களுடைய தண்ணீர் வழியை அவர்களை விட்டும் தடுத்து விட்டீர்கள் என்றால், அவர்கள் தங்களுக்கு முன் ஆயுதங்களைக் கீழே போட்டு விடுவார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவருக்குப் பின்னால் சென்றார்கள். அவருடன் சென்றார்கள். யூதர்களின் சுரங்கப் பாதைகளைத் தடுத்து விட்டார்கள். அவர்களுடைய தண்ணீருக்கான இடம் அவர்களை விட்டுத் துண்டிக்கப்பட்டதால் அவர்கள் வெளியே வந்தார்கள். பிறகு, கடுமையான யுத்தம் துவங்கி விட்டது. போர் ஆரம்பித்து விட்டது. அன்று முஸ்லிம்களில் ஸஹாபிகள் சிலர் ஷஹீது ஆகிவிட்டார்கள். யூதர்களில் 10 பேர் கொல்லப்பட்டனர். பெருமானார் (ஸல்) அவர்கள் வெற்றி பெற்றார்கள். இது நதாஹ் கோட்டைகளில் கடைசி கோட்டையாக இருந்தது.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நதாஹில் பணியை முடித்ததும், ஷக்கின் கோட்டைகளை நோக்கி அழைத்துச் சென்றார்கள். இது கோட்டைகளின் மூன்றாவது தொகுப்பாக இருந்தது. இது குறித்து ஏற்கனவே கூறியிருக்கிறேன். இங்கு யூதத் தலைவன் ஸலாம் பின் மிஷ்கமின் மரணம் பற்றியும் குறிப்பு காணப்படுகிறது.

நதாஹின் கோட்டைகளின் போரில் ஸலாம் பின் மிஷ்கம் என்பவனும், முஸ்லிம்களின் கைகளால் கொல்லப்பட்டான். ஸலாம் பனூ நளீர் கோத்திரத்தின் ஒரு மிகப் பெரிய தலைவன் ஆக இருந்தான். யூதர்களின் வழிகாட்டியாக இருந்தான். ஆனால், அவன் நோய்வாய்ப்பட்டிருந்தான். எனவே அவன் இதர யூத தலைவர்கள் போல போரில் செயல் ரீதியாக பங்கெடுக்கவில்லை. அதாவது வாளும், அம்பும் எடுத்துக் கொண்டு சுயமே போரில் பங்கு பெறவில்லை.அவனுடன் இருந்தவர்கள் அவனுக்குக் கதீபா பகுதிக்குச் செல்லுமாறு ஆலோசனை கொடுத்தனர். ஏனெனில், அது அதிகம் பாதுகாப்பானதாகும். ஆனால் ஸலாம் பின் மிஷ்கம் நிரந்தர நோயாளியாக இருந்தும் கூட, இந்த ஆலோசனையை ஏற்றுக் கொள்ளவில்லை. எதுவரை என்றால், அவன் நதாஹ் பகுதியிலேயே முஸ்லிம்கள் கைகளால் கொல்லப்பட்டான்.

அவனது நோய் சம்பவம் சரி என்றால், செயல்ரீதியாகப் போர் புரிபவனாக இருக்கவில்லை என்றால், பிறகும் கூட அவனைக் கொன்றது இந்த வகையில் ஆட்சேபனைக்குரியதல்ல. அதாவது அவன் போருக்கு அனுப்புவதற்காகத் தனது படையை ஆயத்தம் செய்தான். இவன் அவர்களை மேற்பார்வையிட்டிருப்பான். எனவே அந்தப் போர் சூழலில் ஸஹாபி ஒருவர் அவனையும் கொன்று விட்டார். காரணம், அங்கு அவர்களுடன் அவன் இருந்தான். படையின் தலைவனுக்குப் பெரும் முக்கியத்துவம் இருப்பதுண்டு. தலைவன் மரணிப்பதால்




படையும் மனம் தளர்ந்து விடும். எனவே இந்த வகையில் அவன் கொல்லப்பட்டாலும் எந்த ஆட்சேபனைக்குரிய விஷயமும் அல்ல.

ஷக்கின் இரு கோட்டைகளை முற்றுகையிடுதல். ஷக் என்பதும் ஓரிரு கோட்டைகளின் தொகுப்பாக இருந்தது அல்லது மூன்று கோட்டைகளின் தொகுப்பாக இருந்தது. அதை வெற்றி கண்டது பற்றி இவ்வாறு கூறப்பட்டுள்ளது: ஷக்கின் முதல் கோட்டை - இவை இரண்டு கோட்டைகள் இருந்தன- மாறபி (ஸல்) அவர்கள் துவங்கிய ஷக்கின் அந்த முதல் கோட்டை உபையின் கோட்டையாகும். துவக்கத்தில் யூதன் ஒருவன் ஒற்றையாகப் போர் புரிவதற்காக அழைத்தான். அவனுக்கு எதிராக ஹஸ்ரத் ஹுப்பாப் பின் முன்ஸிர் (ரலி) அவர்கள் சென்றார்கள்.

அவர்கள் இருவரும் ஒருவர் மற்றவரைத் தாக்கினார்கள். ஹஸ்ரத் ஹுப்பாப் (ரலி) அவர்கள் ஒரு வீச்சில் அவனது வலது தோளுக்கு நடுவில் வெட்டி விட்டார்கள். இதனால் அவன் கையிலிருந்து வாள் விழுந்து விட்டது. அவன் தோல்வியைத் தழுவியவாறு தனது கோட்டை பக்கம் ஓடி விட்டான். ஹஸ்ரத் ஹுப்பாப் (ரலி) அவர்கள் அவனை விரட்டிச் சென்றார்கள். மேலும், அவனது முதுகெலும்பின் தசையை வெட்டி விட்டார்கள். அவன் விழுந்து விட்டான். எனவே ஹஸ்ரத் ஹுப்பாப் (ரலி) அவர்கள் அவனைக் கொன்று விட்டார்கள்.

பிறகு, இன்னொருவன் வந்தான். ஒற்றையாகப் போர் புரியப் போகிறவர் யார்? எனக் கேட்டான். முஸ்லிம்களில் ஜஹ்ஷ் சமுதாயத்திலிருந்து ஒருவர் வெளியே வந்தார். ஆனால், அவர் சண்டையிட்டவாறு ஷஹீது ஆகிவிட்டார். அந்த யூதன் தனது இடத்தில் நின்று கொண்டு மீண்டும் ஒற்றையாகப் போர் புரிய அழைத்தான். எனவே அபூ துஜானா (ரலி) அவர்கள் அவனோடு சண்டையிட்டார்கள். ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி) அவர்கள் தமது கவசத்தின் மீது செந்நிற ஆடையைக் கட்டி வைத்திருந்தார்கள். அந்த யூதன் மிகவும் விறைப்பாக நடந்து கொண்டான்.

ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி) அவர்கள் விரைவாக முன்னால் சென்றார்கள். அவன் மீது வாள் வீசி அவன் கால்களை வெட்டி அவனைக் கொன்று விட்டார்கள். ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி) அவர்கள் அவனுடைய போர்ப் பொருள்கள், கவசம் மற்றும் வாளை எடுத்துக் கொண்டு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் இந்தப் பொருள்களை ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி) அவர்களுக்கு வழங்கி விட்டார்கள். யூதர்கள் ஒற்றையாகப் போர் புரிவதை நிறுத்திக் கொண்டார்கள். இதற்குப் பிறகு, யாரும் வரவில்லை. பிறகு, முஸ்லிம்கள் தக்பீர் முழக்கத்துடன் முழு வீச்சில் தாக்குதல் தொடுத்து கோட்டைக்குள் நுழைந்து விட்டார்கள்.

முஸ்லிம்களில் எல்லாருக்கும் முன்பாக ஹஸ்ரத் அபூ துஜானா (ரலி) அவர்கள் இருந்தார்கள். முஸ்லிம்கள் இந்தக் கோட்டையில் பண்ட பாத்திரங்களையும், ஆடுகளையும் உணவையும் பெற்றார்கள். யூதர்கள் அனைவரும் ஓடி விட்டார்கள். அவர்கள் மான் போன்று சுவர்களைத் தாண்டிச் சென்று கொண்டிருந்தார்கள். எதுவரை என்றால், அவர்கள் அனைவரும் ஷக்கின் மற்றொரு கோட்டை பக்கம் சென்று விட்டார்கள். மிகவும் வேகமாக ஓடினார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஸஹாபா பெருமக்களுடன்

அவர்களை நோக்கிச் சென்றார்கள். யூதர்களுடன் போர் நடைபெற்றது. யூதர்கள் முஸ்லிம்கள் மீது கடுமையாக அம்பு எய்யவும், கற்களை வீசவும் செய்தார்கள். யூதர்களுக்கு பதிலடியாக முஸ்லிம்களும் அவர்கள் மீது அப்படியே அம்பெய்து கொண்டிருந்தார்கள். ஆனால், யூதர்களின் அம்புகள் முஸ்லிம்களுக்கு அதிக இழப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தன. ஏனெனில், யூதர்கள் அவர்கள் மீது கோட்டை கோபுரங்கள் மீதிருந்து அம்பெய்து கொண்டிருந்தார்கள். மேலிருந்து எய்து கொண்டிருந்தார்கள். முஸ்லிம்கள் கோட்டைக்குக் கீழ் முகாமிட்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் முஸ்லிம்களுடன் யூதர்கள் மீது அம்பெய்து கொண்டிருந்தார்கள். குறிப்பாக, மாநபி (ஸல்) அவர்கள் முகாமிட்டிருந்த அந்த இடம் யூதர்களின் குறியாக இருந்தது. ஏனெனில், அங்கு மிகவும் அதிகமாக அம்புகள் விழுந்து கொண்டிருந்தன. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஆடையில் வந்து பட்டது. ஓர் அறிவிப்பில் வருகிறது. அம்பு பட்டதனால் பெருமானார் (ஸல்) அவர்கள் காயமடைந்து விட்டார்கள். அம்பு பட்டதனால் அன்னாரது ஆடை கிழிந்து விட்டது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அம்பை வெளியே எடுத்தார்கள். பிறகு, அன்னார் ஒரு கை நிறைய கூழாங்கற்களை எடுத்து அந்தக் கோட்டை பக்கம் வீசி விட்டார்கள். அதனால், அவர்களுடைய கோட்டை ஆட்டம் காண ஆரம்பித்து விட்டது. எதுவரை என்றால், முஸ்லிம்கள் யூதர்களைப் பிடித்து விட்டார்கள். பிறகு கைப்பற்றி விட்டார்கள்.

அடுத்து, கதீபாவின் மூன்று கோட்டைகள் இருக்கின்றன. முஸ்லிம்கள் அந்த மூன்று கோட்டைகளையும் முற்றுகையிட்டார்கள். இது பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நதாஹ் மற்றும் ஷக் ஆகியவற்றின் கோட்டைகளை வெற்றி கண்ட பிறகு, யூதர்கள் கதீபாவின் மூன்று கோட்டைகளை வதீஹ். காஸிம் மற்றும் கமூஸ் ஆகியவற்றிற்கு இடம் மாறி விட்டார்கள். கதீபாவின் கோட்டைகளில் எல்லாவற்றையும் விடப் பெரிய கோட்டை கமூஸ் ஆகும்.

இது எல்லாவற்றையும் விடப் பாதுகாப்பான கோட்டையாக இருந்தது. யூதர்கள் இந்த மூன்று கோட்டைகளிலும் அடைந்து கொண்டு இருந்து விட்டார்கள். அவர்கள் தம்முடைய கோட்டைகளிலிருந்து கீழே எட்டி கூட பார்க்கவில்லை. அவர்களில் ஒற்றையாகப் போர் புரிவதற்காக வருபவரும் யாரும் இருக்கவில்லை. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் 14 நாட்கள் வரை அந்தக் கோட்டைகளை முற்றுகையிட்டு வைத்திருந்தார்கள். எதுவரை என்றால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அவர்கள் மீது பீரங்கித் தாக்குதல் நடத்த முடிவெடுத்தார்கள். அதாவது, பீரங்கி மூலமாக கற்கள் எறிவது, யூதர்களுக்கு அழிந்து போவது பற்றி உறுதியாகத் தெரிந்து விட்ட பிறகு, அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் சமரச வேண்டுகோள் விடுத்தார்கள்.

கினானா பின் அபீ ஹுகைக் என்பவன் யூதர்களில் ஷமாஃஹ் என்ற பெயருடைய ஒரு மனிதனை, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம், நான் தங்களுடன் பேச விரும்புகிறேன் என்ற தூதுச் செய்தியை கொடுத்து அனுப்பினான். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அனுமதி வழங்கிவிட்டார்கள். கினானா பின் அபீ ஹுகைக் கோட்டையிலிருந்து கீழே இறங்கினான். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் சமரச உடன்படிக்கை செய்து கொண்டான்.

பெருமானார் (ஸல்) அவர்கள் கண்ணியத்திற்குரிய ஸஹாபா பெருமக்களை அனுப்பினார்கள். அவர்கள் அந்த மக்களின் செல்வங்களைக் கைப்பற்றிக் கொண்டார்கள். அதாவது ஸஹாபிகள் அவர்களுடைய செல்வங்களை ஆதிக்கத்தில் எடுத்துக் கொண்டார்கள். அந்தக் கோட்டைகளிலிருந்து 100 கவசங்கள், 400 வாள்கள், 1000 ஈட்டிகள், அம்புக் கூடுகளுடன் கூடிய 500 வில்கள் ஆகியவற்றைப் பெற்றார்கள்.

கமூஸ் கோட்டையின் வெற்றி தொடர்பாக இன்னும் சில வேறுபட்ட அறிவிப்புகளும் உள்ளன. எடுத்துக்காட்டாக, கமூஸ் கோட்டையின் வெற்றி தொடர்பாக வாழ்க்கை வரலாற்று நூல்களில் இவ்வாறும் எழுதப்பட்டுள்ளது; அது 20 நாட்கள் வரை முற்றுகையிடப்பட்டிருந்தது. கடைசியில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களது கைகளில் இந்தக் கோட்டை யூதர்களுடனான கடுமையான போருக்குப் பிறகு வெற்றி காணப்பட்டது.

இந்தக் கோட்டை வெற்றி தொடர்பாக சில வாழ்க்கை வரலாற்று ஆசிரியர்கள் நூல்களில் நாயிம் கோட்டை வெற்றி தொடர்பாக மற்ற எழுத்தாளர்கள் எடுத்துரைத்த அதே நிகழ்வுகளை எழுதியுள்ளார்கள். எவ்வாறாயினும், இந்தக் கோட்டை யூதர்களிடமிருந்து வெற்றி காணப்பட்டது. பிறகு, ஓர் உடன்படிக்கை செய்யப்பட்டது. உடன்படிக்கையின் நிபந்தனைகள் பின்வருமாறு:

ஒன்று, யூதர்கள் கண்டிப்பாக எல்லாக் கோட்டைகளையும் காலி செய்து விட வேண்டும்; தங்களுடைய போர்த் தளவாடங்கள், ஆயுதங்கள் ஆகிய அனைத்தையும் இஸ்லாமியப் படை அவற்றை ஆதிக்கத்தில் எடுத்துக் கொள்ளும் பொருட்டு அங்கேயே விட்டு விட வேண்டும். இவ்வாறு அது முஸ்லிம்களின் சொத்துகளின் ஒரு பகுதியாகி விடும். அதாவது, தங்களுடைய ஆயுதங்களை முஸ்லிம்களிடம் ஒப்படைத்து விட வேண்டும்.

இன்றைய காலத்தில் சரணடையச் செய்து விடுவது என்று கூறுகிறார்களே அதுதான்.

இரண்டாவது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பேச்சுவார்த்தைகளுக்கு ஏற்ப யூதர்களின் உயிரைப் பாதுகாப்பதற்கும், அவர்களுடைய பெண்களையும், குழந்தைகளையும் அடிமைகள் ஆக்குவதை விட்டும் மன்னிப்பு வழங்குவதற்கும் வாக்குறுதி அளிக்க வேண்டும். அதாவது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் யூதர்களைப் பாதுகாக்க வேண்டும். கொல்லக் கூடாது. அவர்களுடைய மனைவி மக்களும் பாதுகாக்கப்பட வேண்டும்.

Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL
MERCHANT
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

மூன்றாவது, யூதர்கள் ஃஹைபரிலிருந்து நாடுகடத்தப்பட்ட பிறகு, சிரியாவை நோக்கி சென்று விட வேண்டும்.

நான்காவது நிபந்தனையாக இருந்தது என்னவென்றால், ஃஹைபரிலிருந்து நாடு கடத்தப்படும்போது, அவர்களுடைய பயண விலங்குகளால் சுமக்க முடிந்த அளவுக்குப் பொருள்களை எடுத்துச் செல்ல முஸ்லிம்கள் அனுமதிக்க வேண்டும்.

ஐந்தாவது, யூதர்கள் மறைவான கருவூலங்களின் அனைத்து செல்வங்கள் குறித்தும் முஸ்லிம்களுக்குத் தெரியப்படுத்துவோம் என்றும், வெற்றி பெற்றவர்களிடம் ஒப்படைத்து விடுவோம் என்றும் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஆறாவது, யூதர்கள் இந்த உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு மாறு செய்தாலோ அல்லது கட்டாயம் வெளிப்படுத்த வேண்டிய ஏதாவது ஒன்றை மறைத்தாலோ முஸ்லிம்கள் மீது அதற்கு எந்தப் பொறுப்பும் இருக்காது. முஸ்லிம்கள் அந்த உடன்படிக்கையின் அனைத்து நிபந்தனைகளை விட்டும் விடுபட்டவர்களாக இருப்பார்கள். மேலும், யூதர்களின் செல்வங்களும், சந்ததிகளும் முஸ்லிம்களுக்கு ஆகுமானதாகிவிடும்.

ஃஹைபர் வெற்றி கொள்ளப்பட்ட பிறகு, ஃஹைபரில் தங்குதல் மற்றும் யூதர்களின் பாதி விளைச்சலுக்கு ஃஹைபரின் தோட்டங்களை வழங்குதல் பற்றிய குறிப்பு கிடைக்கிறது. இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: உடன்படிக்கைக்கு ஏற்பவோ யூதர்கள் நாடுகடத்தப்பட்டு சிரியா பக்கம் செல்ல வேண்டியிருந்தது. ஆனால், தங்களை ஃஹைபரில் இருக்க விடுமாறும், மேலும் நாங்கள் இங்குள்ள விவசாயத்தை, வயல் வேலைகளை செய்து கொண்டே இருப்போர்; ஏனெனில், எங்களுக்கு இதைப் பற்றி மிகவும் அதிகமாக தெரியும் என்றும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் யூதர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவர்களுடைய விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்டவாறு, அவர்கள் வேளாண்மை செய்து, அதற்குக் கூலியாக பாதி விளைச்சலை எடுத்துக் கொண்டு ஃஹைபரில் இருப்பதற்கு அனுமதி வழங்கி விட்டார்கள். அவர்களுடன் மிகவும் மென்மையாக நடந்து கொண்டார்கள்.

ஸஹீஹ் புகாரீயின் அறிவிப்பில் இதைப் பற்றி இவ்வாறு கூறப்பட்டுள்ளது: ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஃஹைபரை யூதர்கள் அதில் வேலை செய்து கொள்வதற்காக, விவசாயம் பார்ப்பதற்காக அங்கு வரும் விளைச்சலில் பாதியை அவர்கள் எடுத்துக் கொள்ளலாம் என அவர்களுக்கு வழங்கி விட்டார்கள்.

ஃஹைபரில் ஷஹீதான ஸஹாபா பெருமக்களின் எண்ணிக்கை 17 ஆகும். அவர்களுடைய பெயர்கள் பின்வருமாறு:

ஹஸ்ரத் ரபீஆ பின் அக்ஃஸம், ஃசக்ஃப் பின் அம்ர், ஹஸ்ரத் ரிஃபா பின் மஸ்ரூஹ், ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமய்யா, ஹஸ்ரத் மஹ்மூத் பின் மஸ்லமா, ஹஸ்ரத் அபூ ஸய்யாஹ் பின் நுஃமான், ஹஸ்ரத் ஹாரிஸ் பின் ஹாதிப், ஹஸ்ரத் அத்தீ பின் மார்ரஹ், ஹஸ்ரத் அவ்ஸ் பின் ஹுபைப், ஹஸ்ரத் ஹுனைஃப் பின் அவாயில், ஹஸ்ரத் மஸ்ஊத் பின் ஸஃது, ஹஸ்ரத் பிஷ்ர் பின் பராஅ, ஹஸ்ரத் ஃபுலைஸ் பின் நுஃமான், ஹஸ்ரத் ஆமிர் பின் அக்வா, ஹஸ்ரத் உம்மாரா பின் உக்பா,

கருப்பின அடிமை ஹஸ்ரத் யஸார், அஷ்ஜஃ கோத்திரத்தின் ஒரு நபர். அவர் பெயர் எழுதப்படவில்லை.

யூதர்களில் 92 பேர் இந்தப் போரில் கொல்லப்பட்டார்கள். அவர்களில் தலைவர்கள் சிலரின் பெயர்கள் பின்வருமாறு:

ஹாரிஸ், அபூ ஸைனப், மர்ஹப், உஸைர், யாஸிர், ஆமிர் கினாகினா மற்றும் அபூ ஹுகைக்.

ஃகைபருக்கு பிறகு பல்வேறு நிகழ்வுகளும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு நிகழ்வு கினானா பின் ரபீஃ கொல்லப்பட்டதாகும். வரலாற்று நூல்களிலும், வாழ்க்கை வரலாற்று நூல்களிலும் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது: ஃகைபர் வெற்றி கொள்ளப்பட்ட பிறகு, யூதர்களுடன் உடன்படிக்கை ஆனதும், அதற்குப் பிறகு, மக்கள் கினானாவையும் அவன் சகோதரன் ரபீஅயையும் பெருமானார் (ஸல்)அவர்களிடம் அழைத்து வந்தார்கள்.

கினானா முழு ஃகைபரின் தலைவனாக இருந்தான். ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்களின் கணவனாக இருந்தான். ரபீஃ அவனுடைய சிறிய தந்தை வழி சகோதரன் ஆக இருந்தான். கினானாவிடம் யூத கோத்திரம் பனூ நளீரின் தலைவன் ஹுயய் பின் அஃஹ்தப் உடைய கருவூலம் இருந்தது. அதில் தங்கம், வெள்ளி போன்ற நகைகள் முதலியவை இருந்தன. இந்த நகைகளை அரேபியர்களுக்கு அவர்களுடைய திருமண நிகழ்ச்சிகளில் வாடகைக்குக் கொடுத்து வந்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்கள் இருவரிடமும் உங்களின் அந்தக் கருவூலம் எங்கே? எனக் கேட்டார்கள். அதற்கு, அவர்கள் நாங்கள் மதீனாவிலிருந்து வெளியேறியபோது, அதற்குப் பிறகு சிறிது சிறிதாக அது அனைத்தும் செலவாகிவிட்டது என்று கூறினார்கள். ஓர் அறிவிப்பில் இவ்வாறு உள்ளது; அவர்கள், ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பார்த்து அபுல் காஸிமே! நாங்கள் அதை எங்கள் போரில் செலவு செய்து விட்டோம். இப்பொழுது அதிலிருந்து எதுவுமே மீதமில்லை. நாங்கள் அந்த செல்வத்தை இந்த நாளுக்காகத் தான் சேகரித்தே வைத்தோம் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவர்களிடம், அந்த முழு செல்வமும் செலவாகி விடும் அளவுக்கு மதீனாவிலிருந்து வெளியேறிய காலம் ஒன்றும் நீண்ட காலம் இல்லை என்று கூறினார்கள். அவர்கள் இருவரும் அவர்களிடம் எந்தப் பொருளும் இல்லை என்று ஆணையிட்டுக் கூறினார்கள். இதனால் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அந்தக் கருவூலம் உங்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டால் பிறகு அல்லாஹ்வும் அவன் தூதரும் உங்களுக்கு பொறுப்பு கிடையாது என்று கூறினார்கள்.

அதற்கு அவர்கள் சரி! என்றார்கள்.

> *நபிமொழியிலிருந்து...*
>
> சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)
>
> S.S.H. Muhammed Lebbai
> (Ameer, Melapalayam)

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்த விஷயத்துக்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி), ஹஸ்ரத் அலீ (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) ஆகியோரை சாட்சிகளாக ஆக்கினார்கள். அப்பொழுது யூதர்களில் ஒருவன் எழுந்தான். அவன் கினானாவிடம் சென்று ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் கேட்கும் பொருள் உங்களிடம் இருந்தால் நீங்கள் அவர்களிடம் கொடுத்து விடுங்கள். இல்லையென்றால், உங்களுக்குத் தெரியும் என்றால், எங்கே இருக்கிறது? என்று சொல்லி விடுங்கள். உங்கள் உயிர் தப்பி விடும். இல்லையென்றால், அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவர்கள் நிச்சயமாக அதன் மீது மேலோங்கியே தீருவார்கள் என்று கூறினான்.

இப்னு ஹுகைக் அவனைத் திட்டினான். அந்த யூதன் விலகி அமர்ந்து கொண்டான். இது ஒரு வரலாற்று நூலில் எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இருவரிடமும், நீங்கள் எதையாவது என்னிடமிருந்து மறைத்து பிறகு தெரியவந்தால் அதன் காரணமாக நான் உங்கள் உயிரையும் சந்ததிகளையும் ஆகுமானதாகக் கருதுவேன் என்று கூறினார்கள். அதற்கு அவர்கள் சரி என்றார்கள்.

வரலாற்றின் ஒரு நூலில் இந்தக் கருவூலத்தைப் பற்றிய தெரிய வந்த ஓர் அறிவிப்பு சுருக்கமாக இவ்வாறு கூறப்பட்டுள்ளது:

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அன்ஸார் ஸஹாபிகளில் ஒருவரை வரவழைத்தார்கள். அவர்களிடம், நீர் இன்ன இன்ன மைதானங்களுக்கு செல்வீராக. பிறகு, பேரீத்தம் பழங்களிடம் வருவீராக! பிறகு பேரீத்தம் பழங்களை வலப்புறத்திலிருந்து அல்லது இடப்புறத்திலிருந்து எது உயர்ந்ததோ அவற்றைப் பார்ப்பீராக! அங்கு என்ன இருந்தாலும் அதை என்னிடம் கொண்டு வருவீராக! என்று கூறினார்கள். அதாவது அதற்குக் கீழ் என்ன இருக்கிறதோ அதை.

அந்தக் கருவூலம் மதிப்பிடப்பட்டபோது, அவற்றின் விலையில் அதன் விலை 10 ஆயிரம் தீனார் வந்தது. வாக்குறுதி மீறியதன் காரணமாக அவர்கள் இருவரும் கொல்லப்பட்டனர். அவர்களின் மனைவி மக்கள் சிறைபிடிக்கப்பட்டனர். இது ஓர் அறிவிப்பாகும்.

ஓர் அறிவிப்பில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. எந்த அளவுக்கு சரி என்பது பற்றி பின்னர் திறனாய்வு செய்யப்படும். மற்றோர் அறிவிப்பில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: இப்னு இஸ்ஹாக் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் கினானா அழைத்து வரப்பட்டான். அவனிடம் பனூ நளீரின் கருவூலம் இருந்தது. அந்தக் கருவூலம் பற்றி கேட்கப்பட்டபோது, அவன் மறுத்து விட்டான். பிறகு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் யூதர்களில் ஒருவன் அழைத்து வரப்பட்டான். அவன் பெயர் ஃஸஃலபா ஆகும்.

சில இடத்தில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: ஸாயா பின் ஸலாம் பின் அபீ ஹுகைக்கை வரவழைத்து கேட்டார்கள். அவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், நான் கினானாவை தினமும் அந்தப் பாழடைந்த பகுதிகளின் பக்கம் சுற்றி வருவதைக் கண்டேன் எனக் கூறினான். பெருமானார் (ஸல்) அவர்கள் ஃஸஃலபா கூறிய இடத்துக்கு ஃஸஃலபாவுடன் ஹஸ்ரத் ஸுபைர் பின் அவ்வாம் (ரலி) அவர்களையும் முஸ்லிம்கள் சிலரையும் அனுப்பினார்கள். அங்கிருந்து தோண்டப்பட்டபோது, அதிலிருந்து கருவூலம் வெளிப்பட்டது.

ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. சிறிது கருவூலம் கிடைத்து விட்டது. ஆனால், மற்றவை கிடைக்கவில்லை. கினானாவும் சொல்ல மறுத்து விட்டான். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்களுக்கு கினானாவுக்கு தண்டனை கொடுக்குமாறு கட்டளையிட்டார்கள். ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்கள் தீக்கல்லை எடுத்து வந்தார்கள். அவன் நெஞ்சில் அடிப்பார்கள். அதனால் நெருப்பு வரும். அவன் மரணிக்கும் நிலைக்கு அருகில் சென்ற பிறகு, அவன் மற்ற கருவூலங்கள் பற்றி கூறினான். இதனால் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள், கினானாவை முஹம்மத் பின் மஸ்லமா அவர்களிடம் அவனைக் கொல்வதற்காக ஒப்படைத்து விட்டார்கள்.

எனவே முஹம்மத் பின் மஸ்லமா (ரலி) அவர்கள் ஆட்டுரல் விழச் செய்யப்பட்டு ஷஹீதாகி விட்ட தம் சகோதரர் மஹ்மூத் பின் மஸ்லமா அவர்களுக்கு ஈடு செய்யும் விதமாக கினானாவைக் கொன்று விட்டார்கள். எவ்வாறாயினும், கொன்றார்கள்தான்; ஆனால், எவ்வாறு இந்த நிகழ்வு எடுத்துக் கூறப்படுகிறதோ இந்த விஷயங்கள் அனைத்தும் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரிக்கு எதிராகத் தென்படுகின்றன.

சில அறிவிப்புகளில் இவ்வாறு உள்ளது: ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கட்டளையால் அந்த சகோதரர்கள் இருவரையும் கொன்று விட்டார்கள். ஓர் அறிவிப்புக்கு ஏற்ப கினானாவை முஹம்மத் பின் மஸ்லமா (ரலி) அவர்கள் கொன்றார்கள். அதே வேளையில், அவனுடைய இன்னொரு சகோதரனை பிஷ்ர் பின் பரா (ரலி) அவர்களின் வீட்டாரிடம் ஒப்படைத்து விட்டார்கள். அவனையும் பிஷ்ர் பின் பரா (ரலி) அவர்களுக்கு ஈடு செய்யும் விதமாகக் கொன்று விட்டார்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவர்களுடைய செல்வங்களை ஆகுமானவையாக ஆக்கி விட்டார்கள். அவர்களுடைய சந்ததிகளை சிறைபிடித்து விட்டார்கள்.

இந்த அறிவிப்புகள், நம்பகமான வரலாற்று மற்றும் வாழ்க்கை வரலாற்று நூல்களில் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, தபரீ, தாரீஃஹுல் ஃஹமீஸ், தபக்காத் இப்னு ஸஃது, கிதாபுல் மஃகாஸீ மற்றும் வாக்தீ உடையவையாகும். ஸீரத் இப்னு ஹிஷ்ஷாம், ஸீரத் இப்னு இஸ்ஹாக், ஸீரத் ஹல்பிய்யா, ஸர்கானீ முதலியவை.

கினானாவை இதன் காரணமாகவே கொன்றது பற்றிய குறிப்பு ஹதீஸ் நூல் சுனன் அபீ தாவூதிலும் இருக்கிறது. ஆனால், கினானா கொல்லப்பட்டதற்குப் பல்வேறு காரணங்களும், அறிவிப்புகளும் கூட கிடைக்கின்றன. அவற்றில் இருந்து தெரியவருவதாவது, அவன் கொல்லப்பட்டதற்குக் காரணம் கருவூலத்தை அடையாளமிட்டுக் காட்டாதது கிடையாது.

எவ்வாறு இருப்பினும், ஃகைபரின் இந்த நிகழ்வை கிழக்கத்திய ஆய்வாளர்களும் தம்முடைய நூல்களில் எடுத்துரைத்துள்ளார்கள். பிறகு, ஆட்சேபனை செய்யக் கூடியவர்கள் தங்களது பழக்கத்திற்கு ஏற்ப இஸ்லாத்தின் மீதும், ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தூய


இயல்பின் மீதும் ஆட்சேபனைகள் செய்துள்ளார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குப் பொருள்கள் மீதும் செல்வங்கள் மீதும் பேராசை இருந்தது போன்று கூறுகிறார்கள். அல்லது பெருமானார் (ஸல்) அவர்கள் எப்படியெல்லாம் அநீதியிழைக்கவும் கடுமை காட்டவும் செய்தார்கள் என்பது போன்று வெளிப்படுத்த விரும்பியுள்ளார்கள். நவூதுபில்லாஹ்! (அவ்வாறு கூறுவதை விட்டும் நாம் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறோம்).

ஆட்சேபனை செய்பவர்கள் அறிவையும் நீதியையும் சிறிது கூட பயன்படுத்தவில்லை. அதாவது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்க்கையோ ஒரு திறந்த புத்தகத்தைப் போன்று இருந்தது. எந்த மாமனிதர் போர் துவங்குவதற்கு முன்பு எல்லாருக்கும் முன்னிலையில், முதலில் எல்லாருக்கும் எச்சரிக்கை! எந்தக் குழந்தையையும் கொல்லக் கூடாது; எந்தப் பெண்ணையும் கொல்லக் கூடாது; காரணமின்றி மரங்களைக் கூட வெட்டக் கூடாது என்ற அளவில் வரை கட்டளையிடுகின்றார்களோ, எவர் விலங்குகளைக் கூட எந்த இன்னலிலும் பார்க்க விரும்புவதில்லையோ அந்த மாமனிதர் மனிதர்கள் மீது எப்படி அநீதியும் அக்கிரமும் இழைக்க முடியும்?

இவ்வாறே போர்ச் செல்வத்தைப் பெறுவதற்காக போர் புரிவது. முற்றிலும் அடிப்படையற்ற ஒரு குற்றசாட்டு ஆகும். ஃஹைபர் யுத்தமோ எத்தகைய போர் என்றால், பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனாவிலிருந்து புறப்படுவதற்கு முன்னரே எவர் போர்ச் செல்வத்துக்கான நம்பிக்கையுடனும், பேராசையுடனும் கலந்து கொள்ள விரும்புகிறாரோ அவர் நம்முடன் செல்ல வேண்டாம் என்று அறிவித்து விட்டார்கள். இதன் விபரம் முன்னர் கூறப்பட்டு விட்டது.

எந்த நபி (ஸல்) அவர்களின் முன்னுதாரணம்; அழகிய முன்மாதிரி இதுவாக இருக்கிறதோ அவர்கள் தொடர்பாக இப்படிப்பட்ட அறிவிப்புகள் முன்னால் வரும்போது, நீதியின் எதிர்பார்ப்பு என்னவென்றால், நாம் அந்த அறிவிப்புகளை நன்றாக பார்க்க வேண்டும். அவற்றை நன்றாக ஆய்வு செய்து கொள்ள வேண்டும். ஐயமின்றி, ஒவ்வொரு ஹதீஸையும், ஒவ்வோர் அறிவிப்பையும் இயன்ற அளவுக்கு கண்ணியத்துடன் பார்ப்பது முதல் முயற்சியாக இருக்க வேண்டும்.

இயன்ற அளவு அதன் கருத்துக்கு ஏற்ப விளக்கம் அளிக்க முடிந்தால் அதை செய்ய வேண்டும். ஆனால், எவ்வாறு இருப்பினும், மாநபி (ஸல்) அவர்களின் தூய இயல்பு மற்றும் அன்னாரது கண்ணியம் எல்லாவற்றையும் விட முதன்மையானது. பெருமானார் (ஸல்) அவர்களோ நீதி, நியாயத்தின் மொத்த உருவமாகத் திகழ்ந்தார்கள். அகில உலகங்களுக்கும் அருட்கொடையாக இருந்தார்கள். அதற்கு எதிர்மறையாக இருக்கும் ஒவ்வோர் அறிவிப்பும் ஏற்றுக் கொள்வதற்குத் தகுந்ததாக இருக்க முடியாது.



A. SAMSUL ALAM
A. ABDUL RAHIM
Dealers of Natural Precious & Semi-Precious Gemstones
TOONICE
DEALERS OF PRECIOUS & SEMI-PRECIOUS GEMSTONES
No. 100/59-A, 1st Floor, South Thaikkat Street Melapalayam, Tirunelveli-627005 Tamil Nadu, India
+91 9659389953 toonicegems@gmail.com
Al-Nida GEMS
No. 1/83, 1st Floor Village Road Balaji Nagar Extension Puzhuthivakkam, Chennai-600091 Tamil Nadu, India
+91 9042150339 alnidagems@gmail.com
HG GEMS
HANIYAHANA GEMS CO., LTD.
No. 191/16, Soi Puttha Osot Siphraya, Bangrak Bangkok - 10500 Thailand
+66 638751327 gemscertify22@gmail.com


வரலாற்றாசிரியர்களும், வாழ்க்கைச் சரிதைகள் எழுதுபவர்களும் இதையும் கூறுகிறார்கள்: அதாவது, நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான ஹதீஸ்களையும் அறிவிப்புகளையும் பிற்காலத்து மக்கள் தாமே புனைந்து விட்டார்கள். இந்த சதியில் யூதர்களின் தலையீடும் இருந்தது என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை ஆகும். அதாவது, அவர்கள் தவறான அறிவிப்புகளை எடுத்து வைத்து வந்தார்கள்.

பிறகு கினானா மற்றும் அவனுடைய சகோதரன் கொல்லப்பட்டது பற்றி கூறப்படும். இதே நிகழ்வை நமது ஆய்வுக் குழுவும் மிகவும் நன்றாக திறனாய்வு செய்துள்ளது. அறிவிப்புகள் அடிப்படையில் எடுத்துரைக்கப்பட்ட விஷயங்களுக்கு கிழக்கத்திய ஆய்வாளர்கள் செய்த ஆட்சேபனைக்கு பதில் அளித்துள்ளார்கள். மிகவும் நல்ல பதிலாகும். அவர்கள் கூறுகிறார்கள்:

எடுத்துக் கூறுபவர்களுக்கு ஆங்காங்கே தவறு ஏற்பட்டுள்ளது என்பதை இந்த நிகழ்வின் அகச்சான்று சொல்கிறது. பல்வேறு விஷயங்களைக் கலக்குகிறார்கள் என்பதை அவர்கள் மறந்து விடுகிறார்கள். இப்படி ஒரு நிகழ்வு நடந்தது என்றாலும், மிகவும் அதிகரித்து மிகைப்படுத்தி எதிர்மறையாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

எடுத்துக்காட்டாக, யூதர்களுடன் உடன்படிக்கை ஆனதும், எல்லா விதமான நிபந்தனைகளும் முடிவான பிறகு, சமரச உடன்படிக்கை எழுதப்பட்ட பிறகு, அந்தக் கருவூலத்தைப் பற்றி கேட்பதும் வெளிப்படையாகப் பார்க்கும்போது மிகவும் விநோதமாக இருக்கிறது.

ஏனெனில், உடன்படிக்கை அடிப்படையில் ஃஹைபரின் நிலங்கள் போன்றவைத் தவிர யூதர்களுக்கு எந்தவொரு பொருளின் மீதும் இருந்த ஆதிக்கமும், உரிமையும் முடிந்து விட்டது. பிறகு அறிவிப்புகளில் கூறப்பட்டுள்ளது போன்று அந்தக் கருவூலம் கிடைத்து விட்டிருந்தது என்றால், அந்தக் கருவூலம் எங்கே சென்றது? என்பதாகும். மேலும், ஃஹைபரின் என்னென்ன போர்ச் செல்வங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டனவோ அவற்றின் முழு விபரங்களும் வரலாற்று மட்டும் வாழ்க்கை வரலாற்று நூல்களில் உள்ளன.

நெய், கொழுப்பு, பேரீத்தம் பழம், உடைகள், பொருட்கள், கால்நடைகள், ஈட்டிகள், வாள்கள், அம்புகள், கேடயங்கள் போன்றவை . ஆனால், இன்னாருக்கு இவ்வளவு தங்கம், வெள்ளி அல்லது வைர வைடூரியங்கள் கிடைத்தன என்று எங்கேயும், எந்த இடத்திலும் கூறப்படவில்லை. ஆனால், அதற்கு நேர்மாறாக, ஃஹைபரின் போர்ச் செல்வங்களில் எந்த விதமான தங்கமோ வெள்ளியோ கிடைக்கவில்லை என்று எழுதப்பட்டுள்ளது. இது புகாரீயின் அறிவிப்பு ஆகும்.

கருவூலத்தைத் தேடுவதற்காக செய்யப்பட்ட விசாரணைகள் பற்றி அறிவிப்புகளில் கடுமையான முரண்பாடும், பதற்றமும் உள்ளது. ஓர் அறிவிப்பில் கினானாவிடம் கேட்டதாக உள்ளது. ஒன்றில் கினானா மற்றும் அவனுடைய சகோதரன் ஆகிய இருவரும் அழைக்கப்பட்டதாக உள்ளது. ஒன்றில் அவர்களுடன் சேர்த்து ஒரு யூதனிடம் கேட்டதாக உள்ளது. அவர்களுடைய சிறிய தந்தையாரான ஹுயையிடம் கேட்கப்பட்டதாக உள்ளது.

அடுத்து, இந்த எல்லா விசாரணைகளுக்கும் பிறகு, தண்டனை கொடுக்க வேண்டியிருந்தது என்றால், பலர் குற்றவாளிகள் ஆகிறார்கள். ஆனால், அறிவிப்பின் அடிப்படையில் இருவருக்கு மட்டுமே தண்டனை அளிக்கப்பட்டது. அதாவது கினானா மற்றும் அவனுடைய சகோதரன்.

சில அறிவிப்புகளின் அடிப்படையில் கினானாவுக்கு மட்டும்தான் தண்டனை அளிக்கப்பட்டது. புகாரீயில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமது கிலாஃபத் கால கட்டத்தில் ஃஹைபாரிலிருந்து யூதர்களை நாடு கடத்த எண்ணியபோது, அப்பொழுது அன்னாரிடம் அபுல் ஹுகைகின் மகன் ஒருவன் வந்தான். புகாரிக்கு விளக்கவுரை எழுதும் அல்லாமா இப்னு ஹஜர் அவர்கள் எழுதுகிறார்கள்: கினானாவின் இந்த சகோதரன் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலம் வரை உயிரோடு இருந்தான். நாடுகடத்தப்படும் வரை ஃஹைபரிலேயே இருந்து வந்தான். எனவே சகோதரன் கொல்லப்பட்ட விஷயமும் தவறாகி விட்டது.

வாழ்க்கை வரலாறு எழுதுபவர்களில் சிலர் புகாரியின் இந்த அறிவிப்பை இவ்வாறு பொருத்திக் கூறுகிறார்கள்: கினானாவுக்கு மட்டுமே தண்டனை வழங்கப்பட்டது.

எவ்வாறாயினும், எடுத்துக் கூறப்பட்ட இந்த விஷயங்கள் அனைத்திலும் இருந்த முரண்பாடுகள் காரணமாக எவற்றில் ஏதாவது கருவூலத்தைப் பெறுவதற்காக உடல் தண்டனை வழங்கப்பட்டது பற்றி கூறப்பட்டுள்ளதோ, எவற்றில் இந்த நிகழ்வு எடுத்துக் கூறப்பட்டுள்ளதோ இப்படிப்பட்ட அறிவிப்புகள் அனைத்தும் சந்தேகத்திற்குரியவையாக ஆக்கப்படுகின்றன.

உண்மை என்னவென்றால், இந்த அறிவிப்பே சரியானதல்ல. ஆக, புகழ்பெற்ற ஒரு வாழ்க்கை வரலாற்று ஆசிரியர் அல்லாமா ஷிப்லீ நுஃமானீ அவர்கள் இவ்வாறு எழுதுகிறார்கள்:

ஃஹைபரின் நிகழ்வுகளில் வாழ்க்கைச் சரிதை இயற்றுபவர்கள், வாழ்க்கை வரலாறு எழுதுபவர்கள் மிகவும் கடுமையான ஒரு தவறான அறிவிப்பை எடுத்து எழுதியுள்ளார்கள். அது பெரும்பாலான நூல்களில் மாறி வந்து பொதுவான வழக்கத்தில் வந்து விட்டது. அதாவது, அது ஏற்றுக் கொள்ளப்பட்டது. அறிவிப்புகளில் இணைத்துக் கொள்ளப்பட்டது.

அதாவது, முதல் விஷயம், மாநபி (ஸல்) அவர்கள், யூதர்களுக்கு அவர்கள் எதையும் மறைக்கக் கூடாது என்ற நிபந்தனையின் பேரில் உயிருக்கு உத்தரவாதம் வழங்கியிருந்தார்கள். ஆனால், கினானா பின் ரபீஃ கருவூலத்தைப் பற்றி சொல்ல மறுத்தபோது, பெருமானார் (ஸல்) அவர்கள் கடுமைகாட்டி அவனிடமிருந்து கருவூலத்தைப் பற்றி அறிந்து கொள்ளுமாறு ஹஸ்ரத் ஸுபைர்


**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

**தொலைபேசி எண் : 1800 103 2131**

இந்த ***TOLL FREE*** எண்ணில்

ஃபோன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

(ரலி) அவர்களுக்குக் கட்டளையிட்டார்கள். ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்கள் தீக்கல்லை இயக்கி அவனது நெஞ்சில் சூடு போட்டார்கள். எதுவரை என்றால், அவன் உயிர் போகும் அளவுக்கு சென்று விட்டது. கடைசியில் பெருமானார் (ஸல்) அவர்கள் கினானாவைக் கொல்ல வைத்து விட்டார்கள். யூதர்களின் ஆண்கள், பெண்கள் அனைவரும் அடிமைகளாக ஆக்கப்பட்டனர்.

இந்த அறிவிப்பில் கினானா கொல்லப்பட்டான் என்ற அளவு பகுதி மட்டும் சரியானது ஆகும். ஆனால், அதற்குக் காரணம் அவன் கருவூலத்தைப் பற்றி சொல்ல மறுத்தது தான் என்பதல்ல. மாறாக கினானா, மஹ்மூத் பின் மஸ்லமாவைக் கொன்றிருந்தான் என்பதுதான் அதற்குக் காரணம் ஆகும்.

தபரீயில் தெளிவாக இவ்வாறு உள்ளது: பிறகு, பெருமானார் (ஸல்) அவர்கள் கினானாவை முஹம்மது பின் மஸ்லமாவிடம் ஒப்படைத்தார்கள். அவர்கள் தம் சகோதரர் மஹ்மூத் பின் மஸ்லமாவுக்கு ஈடு செய்யும் விதமாக அவனைக் கொன்றார்கள்.

மற்றப்படி அறிவிப்பின் நிலை என்னவென்றால், இந்த அறிவிப்பை தபரீ மற்றும் இப்னு ஹிஷ்ஷாம் ஆகிய இருவரும் இப்னு இஸ்ஹாக்கிடமிருந்து அறிவித்துள்ளார்கள். ஆனால், இப்னு இஸ்ஹாக் மேற்படி அறிவிப்பாளர் யார் பெயரையும் கூறவில்லை.

இப்னு இஸ்ஹாக் அவர்கள் நபித்துவ போர்களின் நிகழ்வுகளை யூதர்களிடமிருந்து அறிவித்து வந்தார்கள் என்று ஹதீஸ் தொகுப்பாளர்கள் ரிஜாலின் நூல்களில் தெளிவுபடுத்தியுள்ளார்கள். அவர்கள் பல அறிவிப்புகளை யூதர்களின் நூல்களில் இருந்து எடுத்துள்ளார்கள். இந்த அறிவிப்பையும் அந்த அறிவிப்புகளில் ஒன்றாகவே புரிய வேண்டும். மேலும் யூதர்கள் ஒருபோதும் சரியான விஷயத்தைக் கூறமாட்டார்கள்.

இதன் காரணமாகவே, இப்னு இஸ்ஹாக் அவர்கள் இந்த அறிவிப்புகளின் பெயர்களைக் கூறுவதில்லை. கருவூலத்தைப் பற்றி சொல்வதற்காக, ஒருவருடைய நெஞ்சின் மீது தீக்கல்லை வைத்து நெருப்பைக் கொட்டும் அளவுக்கு, ஒருவர் மீது கடுமை காட்டுவதை விட்டும் ரஹ்மத்துல் லில் ஆலமீனின் அதாவது, அகில உலகங்களுக்கும் அருட்கொடையானவரின் மேன்மை மிகவும் உயர்ந்தது. எந்த நபர் நஞ்சு கொடுத்தவருக்கு எதிர்வினை செய்யவில்லையோ அவர்களுக்கு தண்டனை அளிப்பதில்லையோ அந்த நபர் சில காசுகளுக்காக ஒருவரை நெருப்பில் எரிக்கும் தண்டனை அளிக்க முடியுமா?

உண்மை நிகழ்வு இந்த அளவுக்குத்தான் இருந்தது. அதாவது, கினானாவுக்கு அவன் எவ்வித வாக்குறுதி மீறலும், மாற்றி சொல்வதும் செய்யக் கூடாது என்ற நிபந்தனையின் பேரில்தான் உயிருக்கு உத்திரவாதம் அளிக்கப்பட்டது. இன்னும் சொல்வதாயின், அதற்கு எதிராக அவன் என்ன செய்தாலும் அவன் கொல்லப்படுவதற்கு உகந்தவனாவான் என்பதையும் அவன் ஒப்புக் கொண்டான் என்று அறிவிப்பில் உள்ளது. கினானா வாக்குறுதி மீறினான். அவனுக்கு வழங்கப்பட்டிருந்த உயிருக்கு உத்திரவாதம் உடைந்து விட்டது. கினானா மஹ்மூத் பின் மஸ்லமா அவர்களைக் கொன்றிருந்தான். இப்பொழுது அதற்கு ஈடுகட்டும் விதமாக அவன் கொல்லப்பட்டான். முதலிலோ மன்னிக்கப்பட்டிருக்கலாம்; ஆனால் மற்றோர் இடத்தில் அவன் வாக்குறுதி மீறினான். அதன் காரணமாக, அவனுக்குத் தண்டனை கிடைத்தது என்று வந்துள்ளது.

தற்காலத்தில் ஓர் அஹ்மதி எழுத்தாளர் ஸய்யித் பரக்காத் அஹ்மத் ஸாஹிப் தமது நூலான ரஸுலே கரீம் (ஸல்) அவ்ர் யஹூத் ஹிஜ்ஜாஸ் அதாவது, கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்களும் ஹிஜ்ஜாஸின் யூதர்களும் என்ற நூலில் இவ்வாறு எழுதுகிறார்கள்: இப்னு இஸ்ஹாக் எவ்வித அறிவிப்பாளர் பட்டியலும் இன்றி ஒரு நிகழ்வை எடுத்துரைத்துள்ளார்கள். இந்தக் கருத்துகள் முழுக்க முழுக்க தவறாகும். முதல் விஷயம் துன்புறுத்துதல் அதுவும் நெருப்பை வைத்து துன்புறுத்துதல் இஸ்லாமிய போதனைக்கு எதிரானது ஆகும்.

இரண்டாவது, முழு ஃஹைபரின் போர்ச் செல்வத்தில் இந்தக் கண்டெடுக்கப்பட்ட கருவூலம் பகிர்ந்தளிக்கப்பட்டது பற்றிய எந்தக் குறிப்பும் கிடைப்பதில்லை. இந்தக் கருவூலம் பைத்துல் மாலில் சேர்க்கப்பட்டதாகவும் எந்த அறிவிப்பும் இல்லை. இப்னு இஸ்ஹாக் அவர்கள் மட்டுமல்ல ; அதையும் தாண்டி மிகப் பழமையான பிற சேகரிப்புகளிலும் கூட ஃஹைபரின் போர்ச் செல்வத்தில் ரொக்கப் பணம், தங்கம், வெள்ளி அல்லது இதுபோன்ற வேறு விலையுயர்ந்த பொருட்களைப் பற்றிய எந்தக் குறிப்பும் கிடைப்பதில்லை.

எல்லா அறிவிப்புகளும் பண்ட பாத்திரங்கள், ஆடைகள் அல்லது ஆயுதங்கள் தொடர்பானவையாகும். ஃஹைபர் போரில் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் இருந்த ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் இவ்வாறு கூறிவந்தார்கள்: நாங்கள் ஃஹைபரை வெற்றி கண்டு விட்டோம்தான்; ஆனால், போர்ச் செல்வத்தில் எங்களுக்கு தங்கமும், வெள்ளியும் கிடைக்கவில்லை. சுருக்கம் என்னவென்றால், கினானா பின் ரபீஃ கொல்லப்பட்டான். ஆனால், அவன் கொல்லப்பட்டதற்கான காரணம் முஸ்லிம் படைத்தளபதி ஒருவரைக் கொன்றதாகும். அதற்கு ஈடான தண்டனையாக அவனே கொல்லப்பட்டான்.

ஆக, இதுதான் நிஜமான உண்மைத்துவமாகும். இந்த நிகழ்வுகள் தொடர்ந்து சென்று கொண்டிருக்கின்றன. இங்கு இந்த நிகழ்வுகளிலேயே யூதப் பெண் ஒருத்தி பற்றிய குறிப்பும் உள்ளது. அவள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு நஞ்சு கொடுக்க முயற்சி செய்தாள். அன்னாருக்கு எதிராக சதி செய்தாள். ஆனால், மேலான அல்லாஹ் பெருமானார் (ஸல்) அவர்களைப் பாதுகாத்து வைத்தான். இன்ஷா அல்லாஹ் இதன் விபரத்தை - பெரிய சம்பவமாகும். எனவே , இனி எடுத்துரைப்பேன். இன்ஷா அல்லாஹ்!

இப்பொழுது நான் மர்ஹூம் ஒருவர் பற்றி கூற விரும்புகிறேன். பிறகு, அவர்களுக்கு ஜனாஸா காயிப் தொழுகையும் தொழ வைப்பேன். இவர்கள் ஷரீஃப் அஹ்மத் ஸாஹிப் காஹ்லோ(ன்) அவர்களின் மகன் மாஸ்டர் மன்ஸூர் அஹ்மத் ஸாஹிப் காஹ்லோ(ன்) ஆவார்கள். இவர்கள் இன்றைய நாட்களில் ஆஸ்திரேலியாவில் இருந்தார்கள். கடந்த நாட்களில் இவர்கள் மரணமடைந்து விட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

மர்ஹூம் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஸஹாபியுமான ஸஹூர் பகுதியைச் சேர்ந்த சவ்த்ரீ கான் ஸாஹிப் (ரலி) அவர்களின் மகன் வழிப் பேரராவார்கள். ரப்வாவில் கல்வி கற்றார்கள். சிறுவயதிலிருந்தே மார்க்கத் தொண்டாற்றுவதற்கான நற்பேறு கிடைத்து வந்தது.

சிந்துப் பகுதியில் பஷீராபாத் தஃலீமுல் இஸ்லாம் உயர்நிலைப் பள்ளியில் வேலை பார்க்கத் துவங்கினார்கள். ஏறத்தாழ 34 ஆண்டுகள் கற்பிக்கும் துறையுடன் இணைந்திருந்தார்கள். பஷீராபாதிலும் இவர்களுக்குத் தொண்டாற்றும் நற்பேறு கிடைத்தது. குத்தாமுல் அஹ்மதிய்யாவின் காயித் ஆகவும் இருந்தார்கள். ஜமாஅத் சத்ர் ஆகவும் இருந்துள்ளார்கள். ஜூப்ளி நிதியில் தொண்டாற்றும் நற்பேறும் கிடைத்தது. இவர்களுக்கு ஐதராபாதில் 18 ஆண்டுகள் பொதுச் செயலாளராகவும் தொண்டாற்றும் நல்வாய்ப்பு கிடைத்தது. பிறகு 13 ஆண்டுகள் ஐதராபாத் மாவட்ட அமீர் ஆகவும், உள்ளூர் அமீர் ஆகவும் தொண்டாற்றும் நற்பேறு கிடைத்தது.

இவர்கள் தமது வேலை முடிந்ததும், பணி முடிந்ததும் உடனடியாக பள்ளிவாசலுக்கு வந்து விடுவார்கள். அங்கு எல்லா வேலையும் பார்ப்பார்கள். மக்ரிப் தொழுகைக்குப் பிறகு வீட்டுக்குச் செல்வார்கள் அல்லது சிலவேளை இதையும் விட அதிக நேரமாகிவிடும். இது இவர்களுடைய வழிமுறையாக இருந்தது. கிலாஃபத்துடன் பேரன்பு மிக்க இணைப்பு இருந்தது.

ஒவ்வொரு குரலுக்கும் லெப்பைக் கூறக் கூடியவராக ஏழைகளைப் பராமரிக்கக் கூடிய மனிதராக, விருந்தோம்பல் செய்யக்கூடியவராக, அனுதாபம் காட்டக் கூடியவராக இருந்தார்கள். பெரும் வள்ளலாக இருந்தார்கள். அன்பர்களைத் தம் வீடுகளில் வைத்து கல்வி பயில வைத்தார்கள்.

அன்பர்கள் பலரைக் கல்வி கற்கச் செய்துள்ளார்கள். இவர்களின் மாணவர்களில் முரப்பிமார்களும் இருக்கிறார்கள். டாக்டர்களும் இருக்கிறார்கள். பொறியாளர்களும் இருக்கின்றார்கள். பல நாடுகளில் பரவியுள்ளார்கள். மர்ஹூம் வஸிய்யத் செய்தவராக இருந்தார்கள். இவர்கள் பின்விட்டுச் சென்றவர்களில், துணைவியார் மட்டுமின்றி மகள் ஒருவரும் மகன்கள் ஐவரும் இருக்கின்றார்கள். முபஷ்ஷிர் அஹ்மத் ஸாஹிப் கோந்தல் இங்கு யூ.கே அமீர் ஸாஹிப் அவர்களின் அலுவலகத்தின் பணியாளராக இருக்கின்றார்கள். இவர்கள் அவர்களின் மைத்துனரின் கணவராக இருந்தார்கள்.

இவர்களின் மகன் உஸாமா அவர்கள் கூறுகிறார்கள்: நினைவு தெரிந்த நாளில் இருந்து எங்கள் தந்தையாருக்குப் பள்ளிவாசலுடனும், ஜமாஅத்துடனும் ஒரு வலுவான தொடர்பைக் கண்டோம். பள்ளிவாசல் செல்லாமல் இருப்பது அரிதுதான். அலுவலகத்தில் எப்பொழுதும்

---

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

இருப்பார்கள். ஏதாவது மிகவும் நிர்பந்தம் இல்லாமல் அலுவலகம் செல்லாமல் இருக்க மாட்டார்கள். அலுவலகத்தில் பார்க்க முடியும். பள்ளியில் பார்க்க முடியும் என்பது ஜமாஅத் உறுப்பினர்களுக்கும் தெரியும்.

தலைமையக விருந்தினர்களுக்கு மிகவும் கண்ணியம் அளித்து வந்தார்கள். தொண்டாற்றி வந்தார்கள். ஆஸ்த்ரேலியாவுக்கு இடம் பெயர்ந்து சென்று விட்டார்கள். இங்கு வந்த பிறகும் ஜமாஅத் தொண்டு ஆற்றி வந்தார்கள். ஒவ்வொரு பொருள் தியாகத்திட்டத்திலும் ஆஸ்திரேலியாவில் மட்டுமல்லாமல், பாகிஸ்தானிலும் பங்கு பெற்று வந்தார்கள். ஆஸ்திரேலியாவிலும் தமது மக்கள் வட்டத்தை விரிவாக்கினார்கள். மக்களை மிக விரைவில் தம்மவர்களாக ஆக்கிக் கொண்டார்கள். ஆஸ்திரேலியாவில் உள்ளூர் ஜமாஅத்தில் தஃலீமுல் குர்ஆன் செயலராக இருந்தார்கள்.

தர்பிய்யத் செயலராக தொண்டாற்றும் நற்பேறையும் பெற்றிருந்தார்கள். மிகவும் பணிவுள்ளவராகவும், தொண்டாற்றும் உணர்வால் நிறைந்தவராகவும் இருந்தார்கள். அல்லாஹ் இவர்களுக்குப் பாவமன்னிப்பு வழங்கி, இவர்களோடு கருணையுடன் நடந்து கொள்வானாக! இவர்களுடைய சந்ததிகளுக்கும் இந்த நன்மைகளைத் தொடர்வதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக!

தமிழாக்கம்
மவ்லவி அதாவுல் முஃக்னீ

* * * * *

முதல் பக்கத் தொடர்ச்சி....
(மல்ஃபூஸாத் ..)

شَهْرُ رَمَضَانَ الَّذِیْٓ اُنْزِلَ فِیْهِ الْقُرْاٰنُ

என்பதிலிருந்து ரமலானின் மகத்துவம் தெரிய வருகின்றது. இந்த மாதம் உள்ளத்தை ஒளிமயமாக்குவதற்கு சிறந்த மாதம் ஆகும். இந்த மாதத்தில் அதிகமாக ஆன்மிகக் காட்சி கிடைக்கின்றது. தொழுகை உள்ளத்தை பரிசுத்தப்படுகின்றது; மேலும் நோன்பு உள்ளத்தை ஒளிமயமாக்குகின்றது என்று ஸுஃபிமார்கள் எழுதியுள்ளார்கள். உள்ளத்தை பரிசுத்தமாக்குதல் என்பதன் பொருள் இதுவாகும்; அதாவது, நஃப்ஸே அம்மாரா (தீமையின் பக்கம் சாய்க்கும்) எனும் ஆன்மாவின் மனஇச்சையிலிருந்து விடுதலை கிடைப்பதாகும். மேலும், உள்ளம் ஒளிமயமாகுதல் என்பதன் பொருள் இதுவாகும்; அதாவது, ஆன்மிக காட்சிக்கான வாசல்கள் அவர் மீது எவ்வாறு திறக்க வேண்டும் என்றால் அவர் இறைவனை கண்டு கொள்ள வேண்டும். எனவே

اُنْزِلَ فِيْهِ الْقُرْاٰنُ

என்பதில் இந்த விஷயமே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. நோன்பிற்கு மகத்தான நற்கூலி இருக்கின்றது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆனால், நோய்களும் சில நோக்கங்களும் அந்த அருட்கொடையிலிருந்து மனிதனை இழப்பிற்குரியவனாக ஆக்கிவிடுகின்றன. எனக்கு நினைவிருக்கின்றது. நான் இளமைப்பருவத்தில் ஒருமுறை கனவில் இவ்வாறு கண்டேன்; அதாவது நோன்பு நோற்பது அஹ்லே பைத்தின் சுன்னத்தாகும். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனக்கு ஆதரவாக இவ்வாறு கூறினார்கள்:

سَلْمَانُ مِنَّا اَهْلَ الْبَيْتِ

ஸல்மான் அதாவது அந்த

اَلصُّلْحَان

என்ற அந்த நபரின் கைகளால் இரு சமாதானம் நிகழும். ஒன்று, உட்புற சமாதானம்; மற்றொன்று வெளிப்புற சமாதானம். இவர் இந்த பணியை ரிஃப்க் மூலமாக செய்வாரே தவிர வாளினால் அல்ல. நான் போர் புரிந்த ஹுஸைன் அவர்களின் நீர் அருந்தும் இடத்தில் இல்லை ; மாறாக நான் போர் புரியாத ஹஸன் அவர்களின் நீர் அருந்தும் இடத்தில் உள்ளேன்.

ஆக, இது நோன்பின் பக்கம் சுட்டி காட்டுகின்றது என்பதை நான் புரிந்து கொண்டேன். ஆக, நான் ஆறு மாதம் வரை நோன்பு வைத்தேன். இதற்கிடையில் நான் (கனவில்) கண்டேன்; ஒளிகளால் நிறைந்த நிறைய தூண்கள் விண்ணிற்கு சென்று கொண்டிருக்கின்றன. ஒளியின் தூண்கள் பூமியிலிருந்து விண்ணிற்கு சென்றனவா அல்லது எனது இதயத்திலிருந்து சென்றனவா? என்ற விஷயம் ஐயமாக இருக்கின்றது. ஆயினும், இவை அனைத்தும் இளமைப் பருவத்தில் செய்ய முடிந்திருந்தது. நான் விரும்பியிருந்தால் பின்னர் நான்கு வருடம் வரை கூட நான் நோன்பு வைத்திருக்க முடியும்.

தற்போது நாற்பது வருடங்களை கடந்ததிலிருந்து நான் பார்க்கின்றேன். அந்த விஷயம் இருக்கவில்லை. ஏனெனில், முன்னர் பட்டாலா வரை நான் பலமுறை நடந்தே சென்றேன்; மேலும் நடந்தே திரும்பி வந்தேன். எந்த சோம்பலும், பலவீனமும் எனக்கு ஏற்பட்டதில்லை. தற்போதோ ஐந்து மைல்கள் சென்றாலும் கூட வேதனை ஏற்படுகின்றது. எனவே நாற்பது வருடங்களுக்குப் பிறகு உடல் சூட்டின் வெப்பம் குறையத் தொடங்கி விடுகின்றது. மேலும் இரத்த உற்பத்தி குறைந்து விடுகின்றது. மேலும் மனிதனின் மீது ஏராளமான துன்பங்களும், துயரங்களும் கடந்து செல்கின்றன. பசி ஆறுவதற்கு அதிக தாமதமாகிவிட்டால் பின்னர் இயல்பு நிம்மதியிழந்து விடுவதை தற்போது பலமுறை காண முடிகின்றது.

(மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம் 561, காதியான் பதிப்பு 2003-ம் ஆண்டு)

* * * * *

**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

தொலைபேசி எண் : 1800 103 2131

இந்த *TOLL FREE* எண்ணில்
∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

### முக்கிய அறிவிப்பு

## ஸதர் அஞ்சுமன் அஹ்மதிய்யா அஞ்சுமன் தஹ்ரீகே ஜதீத் அஞ்சுமன் வக்ஃபே ஜதீத்,கிளை அமைப்புகளின் பொருளாதார/ கேர் டேக்கர்/ காவலாளி/ சமையல்காரர்/ மஸ்ஜித் காதிம் போன்ற பணிகளில் கிரேட் நான்கு ஊழியர்களின் தேவை உள்ளது

### நிபந்தனைகள்

(1) விண்ணப்பதாரர் 40 வயதிற்கு மேற்பட்டவராகவும்,18 வயதிற்கு குறைந்தவராகவும் இருக்கக் கூடாது.
(2) விண்ணப்பதாரருக்கு எந்தக் கல்வித் தகுதியும் கிடையாது. எனினும், படிப்பறிவு பெற்ற விண்ணப்பதாரருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
(3) இந்த அறிவிப்பிற்கு பிறகு 2 மாதத்திற்குள் கிடைக்கப் பெறுகின்ற விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும்.
(4) தலைமையக பணியாளர்கள் தேர்வுக் குழுவின் நேர்முகத் தேர்வில் வெற்றி பெறும் விண்ணப்பதாரர்களே தொண்டிற்காக தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.
(5) நேர்முகத் தேர்வு நடைபெறும் சூழலில் விண்ணப்பதாரர் காதியான் நூர் மருத்துமனையின் மூலம் பரிசோதிக்கப்படுவார். மேலும் காதியான் நூர் மருத்துவமனை போர்ட்டுக்கு ஏற்ப உடல் ஆரோக்கியமும், தகுதியும் பெற்ற விண்ணப்பதாரர் மட்டுமே தொண்டிற்கு தகுதி பெற்றவராக இருப்பார்.
(6) தேர்ந்தெடுக்கப்படும் நிலையில் விண்ணப்பதாரர் காதியானில் தமது தங்குமிடத்திற்கான ஏற்பாட்டை சுயமே செய்து கொள்ள வேண்டும்.
(7) காதியான் வந்து செல்வதற்கான செலவும், மருத்துவ பரிசோதனைக்கான செலவுகளையும் விண்ணப்பதாரரே செய்து கொள்ள வேண்டும்.

குறிப்பு:
நேர்முகத்தேர்விற்கான தேதி விண்ணப்பதாரர்களுக்கு பின்னர் அறிவிக்கப்படும்.

**மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்**
**நஸாரத் தீவான் ஸத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா காதியான்**
**அஞ்சல் எண்: 143516**
**அலைபேசி எண்: 09682627592, 09888232530,**
**அலுவலகம் எண்: 01872 - 501130**

E-mail: diwan@qadian.in

# ஜுமுஆ பேருரை

**ஃஹைபர் போரின் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு**

ஃஹைபர் நாளில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கு வாய்ப்பு கிடைத்தது. எவர் இறைவனை நேசிக்கிறாரோ, மேலும் இறைவன் எவரை நேசிக்கிறானோ அவருக்கு நான் வாய்ப்பு கொடுப்பேன் ; எவருக்கு அல்லாஹ் மேன்மையை வழங்கி இருக்கின்றானோ அவரிடத்தில் நான் வாளை ஒப்படைப்பேன் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இறைவன் இந்த (ஃஹைபர்) நகரத்தின் வெற்றியை ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் கரத்தில் நிர்ணயித்திருக்கின்றான். இதன் பிறகு அடுத்த நாள் காலை ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை அழைத்து அன்னாரிடம் கொடியை ஒப்படைத்து விட்டார்கள்

போர் ஆரம்பிப்பதற்கு முன்பு பெருமானார் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளிடத்தில் ஒரு சுருக்கமான சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். எதிரியை எதிர்கொள்ள வேண்டும் என்று ஆவல் கொள்ளாதீர்கள். அல்லாஹ்விடம் நலனை வேண்டுங்கள். நீங்கள் எந்த சோதனையில் இடப்படுவீர்கள் என்று உங்களுக்கு தெரியாது. நீங்கள் எதிரியை எதிர்கொள்ள நேர்ந்தால்

اَللّٰهُمَّ أَنْتَ رَبُّنَا وَرَبُّهُمْ وَنَوَاصِيْنَا

وَنَوَاصِيْهِمْ بِيَدِكَ وَاِنَّمَا تَقْتُلُهُمْ أَنْتَ

என்று துஆ செய்யுங்கள் என்றார்கள். அதாவது, அல்லாஹ்வே! நீ எங்களுடைய இறைவனும் ஆவாய்; அவர்களின் இறைவனும் ஆவாய்! அவர்களின் நியதியும் எங்களின் நியதியும் உன் கையில் உள்ளது; நீயே அவர்களை அழிப்பாயாக!

---

**அரபு நாடுகள் இப்பொழுதாவது தம் கண்ணை திறக்க வேண்டும்; ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு முயற்சிக்க வேண்டும். அது அல்லாமல் வேறு வழியொன்றும் இல்லை. இல்லையென்றால், பாலஸ்தீனர்கள் மட்டுமின்றி மீதம் இருக்கின்ற அரபு நாடுகளும் கடும் கஷ்டத்தை எதிர்கொள்ள வேண்டியது வரும்**

பாகிஸ்தானுடைய அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். சில சமயங்களில் எதிர்ப்புகளில் அவர்களின் சூழ்நிலையும் மிக அதிக கடுமையானதாக ஆகி விடுகின்றன. வங்காளதேசத்தின் அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அங்கும் அல்லாஹ் அவர்களை எல்லாவிதமான எதிர்ப்புகளில் இருந்தும், தாக்குதல்களிலிருந்தும் காப்பாற்றுவானாக. மற்ற இடங்களில் உள்ள அநீதிக்குளான மக்களுக்காகவும் துஆ செய்யுங்கள். அநீதிக்குள்ளான அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள்

## ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 14 பிப்ரவரி 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **தப்லீஃக் மாதம் 14 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ

وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○

صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

**சென்ற இதழின் தொடர்ச்சி........**

போருடைய விபரம் இவ்வாறு கூறப்பட்டுள்ளது ; போர் ஆரம்பிப்பதற்கு முன்பு பெருமானார் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளிடத்தில் ஒரு சுருக்கமான சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். எதிரியை எதிர்கொள்ள வேண்டும் என்று ஆவல் கொள்ளாதீர்கள். அல்லாஹ்விடம் நலனை வேண்டுங்கள். நீங்கள் எந்த சோதனையில் இடப்படுவீர்கள் என்று உங்களுக்கு தெரியாது. நீங்கள் எதிரியை எதிர்கொள்ள நேர்ந்தால்,

اَللّٰهُمَّ أَنْتَ رَبُّنَا وَرَبُّهُمْ وَنَوَاصِيْنَا

وَنَوَاصِيْهِمْ بِيَدِكَ وَاِنَّمَا تَقْتُلُهُمْ أَنْتَ

என்று துஆ செய்யுங்கள் என்றார்கள். அதாவது, அல்லாஹ்வே! நீ எங்களுடைய இறைவனும் ஆவாய்; அவர்களின் இறைவனும் ஆவாய்! அவர்களின் நியதியும் எங்களின் நியதியும் உன் கையில் உள்ளது; நீயே அவர்களை அழிப்பாயாக!

அதற்குப் பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் போர் புரியுமாறு கட்டளையிட்டார்கள். மேலும் நிதானத்தை பேணுமாறு ஸஹாபிகளுக்கு அறிவுரை கூறினார்கள். முதலில் நாயிம் எனும் கோட்டை முற்றுகையிடப்பட்டது. இது யூதர்களுடைய மிகப் பலம் வாய்ந்த கோட்டையாக இருந்தது. அன்னார் அந்த நாளில் கடுமையாக போரிட்டார்கள். நத்தா வாசிகள் அன்னார் (ஸல்) கடுமையாக எதிர்த்தார்கள். அந்நாளில் ஸஹாபிகள் (அதை) தடுத்துக் கொண்டிருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் இரு கவசங்களையும், தலை கவசத்தையும் அணிந்திருந்தார்கள். ஸரிப் எனும் குதிரையில் அமர்ந்திருந்தார்கள். ஸரிப் என்பது அன்னாருடைய குதிரையின் பெயராகும். அன்னாருடைய கையில் ஈட்டியும், கேடயமும் இருந்தது. எதிரிகள் தொடர்ச்சியாக அம்பெய்து கொண்டிருந்தார்கள். ஆனால், முஸ்லிம்கள் முன் எச்சரிக்கையுடன் அம்பெய்து கொண்டிருந்தார்கள். ஏனெனில், அம்புகள் குறைவாக இருந்தன. எந்த அளவுக்கென்றால், யூதர்கள் சார்பாக எறியப்படும் அம்புகளையும் எடுத்து அவற்றை அவர்கள் மீதே முஸ்லிம்கள் எறிந்து கொண்டிருந்தார்கள். இந்தப் போரில் ஹஸ்ரத் மஹ்மூது பின் மஸ்லமா (ரலி) அவர்கள் களைப்படைந்திருந்தார்கள். ஆயுதங்கள் அவர்களுக்கு சுமையாக தெரிய ஆரம்பித்தன. வெப்பமும் கடுமையாக துன்புறுத்திக் கொண்டிருந்தது. ஆகவே அவர்கள் நாயிம் கோட்டையினுடைய மதில் சுவரின் நிழலில் அமர்ந்து விட்டார்கள். யூதர்களின் தலைவனான மர்ஹப் இவர்களை பார்த்து விட்டான். அவன் இவர்கள் மீது திருக்கைக் கல்லை எறிந்து விட்டான் என்று கூறப்படுகின்றது. கினானா பின் ரஃபீ மேலிருந்து அதை எறிந்ததாகவும் கூறப்படுகின்றது.

அந்தக் கல் அவர்களின் தலையில் விழுந்து அவர்களின் தலையை எந்த அளவு உடைத்து விட்டது என்றால், அவர்களின் தலை உடைந்து முகத்தில் தொங்கிக் கொண்டிருந்தது. பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் அவர்கள் கொண்டு செல்லப்பட்டார்கள். அன்னார் (ஸல்) அந்த பகுதியை திரும்ப அதே இடத்தில் வைத்து துணியால் அந்த இடத்தில் கட்டுப்போட்டார்கள். ஆனால், காயம் எந்த அளவு இருந்ததென்றால், அவர்களால் உயிர் பிழைக்க முடியவில்லை. சில நாட்களுக்குப் பிறகு அவர்கள் மரணமடைந்து விட்டார்கள். அவர்கள் இறந்த பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களின் சகோதரர் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்களுக்கு ஆறுதல் வழங்கும்போது, உம்முடைய சகோதரனை கொன்றவன் விரைவில் தம் முடிவை அடைந்து விடுவான் என்று கூறினார்கள்.

அந்நாளில் முஸ்லிம்கள் அதிக நஷ்டத்தை பொறுத்துக் கொள்ள வேண்டியதிருந்தது. கோட்டைகளில் இருந்து எறியப்பட்ட அம்புகளினால் 50 முஸ்லிம்கள் காயமடைந்திருந்தனர். மாலை நேரமானபோது பெருமானார் (ஸல்)

அவர்கள் ரஜீஃ எனும் இடத்தை நோக்கி புறப்பட்டு சென்றார்கள். மக்களும் புறப்பட்டு வருமாறு கட்டளையிட்டார்கள். இந்த இடம் ஹஸ்ரத் ஹுப்பாப் (ரலி) அவர்களின் ஆலோசனையினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இப்பொழுது இந்த இடம்தான் முஸ்லிம்களின் தலைமையகமாக இருந்தது. ஏற்கனவே கூறப்பட்டது போன்று இந்தக் கோட்டை யூதர்களின் மிக உறுதி வாய்ந்த கோட்டையாக இருந்தது. ஃஹைபரின் பெரும் வீரனான, புகழ்பெற்ற போராளியான மார்ஹப் என்பவன் இந்தக் கோட்டைக்கு தலைமை வகித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு எப்படிப்பட்ட குதிரை வீரர்கள் உதவி செய்து கொண்டிருந்தார்கள் என்றால், அவர்கள் துணிச்சலிலும், வீரத்திலும் அவனை விட குறைவானவர்களாக இருக்கவில்லை. அவர்கள் அவனுடைய இரு சகோதரர்களான யாஸரும், ஹாரிஸும் ஆவார்கள். அறிவிப்பில் இருந்து தெரிய வருவது என்னவென்றால், பெருமானார் (ஸல்) அவர்கள் 10 நாட்கள் தொடர்ச்சியாக போரிட்டுக் கொண்டிருந்தார்கள். அன்னார் ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்களை தன்னுடன் அழைத்துக் கொண்டு புறப்படுவார்கள். முகாமிட்டிருந்த இடத்தில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை கண்காணிப்பாளராக விட்டுச் செல்வார்கள். மாலை நேரத்தில் அன்னார் (ஸல்) அந்த இடத்திற்கு திரும்பி வருவார்கள். காயமடையக் கூடிய முஸ்லிம்களும் அங்குதான் கொண்டு வரப்பட்டார்கள். அங்கு அவர்களின் காயங்களுக்கு கட்டுப் போடப்பட்டுக் கொண்டிருந்தது.

இந்தப் போருடைய சம்பவங்களுள் மார்ஹப் ஒற்றைக்கு ஒற்றை சண்டைக்கு அழைத்த சம்பவத்தைப் பற்றிய குறிப்பும் ஆமிர் பின் அக்வஃ ஷஹாதத் ஆன சம்பவம் பற்றியக் குறிப்பும் காணக் கிடைக்கின்றது. அதன் விபரம் பின்வருமாறு வருகிறது: அந்நாட்களில் ஒரு நாள் யூத படைத் தளபதியான மார்ஹப் - துணிவிலும் வீரத்திலும் தனக்கு நிகரான ஒருவரை கொண்டிருக்காதவனாக அவன் இருந்தான் - கோட்டைக்கு வெளியே வந்து முஸ்லிம்களுக்கு அறைகூவல் விடுத்தவாறு ஆணவத்துடன் தம் வாளை வீசியவாறு,

قَدْ عَلِمَتْ خَيْبَرُ أَنِّي مَرْحَبُ
شَاكِي السِّلَاحِ بَطَلٌ مُجَرَّبُ
إِذَا الْحُرُوبُ أَقْبَلَتْ تُلَهَّبُ

என்ற கவிதையை பாட ஆரம்பித்தான். பொருள்: நானே மார்ஹப்; இது ஃஹைபருக்குத் தெரியும். போர் உக்கிரமானால் நான் ஆயுதம் ஏந்திய, அனுபவமிக்க வீரனாவேன் என்று பாட ஆரம்பித்தான்.

மார்ஹப் உடைய அறைகூவலை கேட்ட ஹஸ்ரத் ஆமிர் பின் அக்வஃ (ரலி) அவர்கள் படைக்கு முன்னால் வந்து,

قَدْ عَلِمَتْ خَيْبَرُ أَنِّي عَامِرُ
شَاكِي السِّلَاحِ بَطَلٌ مُغَامِرُ

என்று பாடினார்கள்.

பொருள்: ஃஹைபருடைய மூலை முடுக்களுக்கு எல்லாம் நான் ஆமீர் என்பது தெரியும். நான் ஆயுதம் ஏந்திய வீரனாவேன். போர் அலையின் ஆபத்துகளில் அச்சமற்று கவிதை பாடக் கூடியவனாவேன்.

அதற்குப் பிறகு, அந்த இருவரும் எதிரெதிரே வந்தார்கள். ஒருவர் மற்றவர் மீது தாக்குதல் நடத்த ஆரம்பித்தார்கள். மார்ஹப் வாளைக் கொண்டு தாக்கியபோது ஹஸ்ரத் ஆமிர் (ரலி) அவர்கள் தம் கேடயத்தால் அதை தடுத்து, உடனே குனிந்து கொண்டு கீழ்ப்பக்கமாக அவனைத் தாக்கினார்கள். ஆனால் அவர்களின் வாள் சிறியதாக இருந்தது. எனவே அவன் மீது வாள் படுவதற்கு பதிலாக ஹஸ்ரத் ஆமிர் (ரலி) அவர்களுக்கே அவர்களின் வாள் ஆழமான காயத்தை ஏற்படுத்தியது. அதன் காரணமாக அவர்கள் ஷஹீதாகி விட்டார்கள்.

இவர்கள் இந்த போரின் இரண்டாவது ஷஹீதாக இருந்தார்கள். இருவரும் ஒரே கபரில் அதாவது ரஜீஃ எனும் இடத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

ஹஸ்ரத் ஸலமா பின் அக்வஃ (ரலி) அறிவிக்கிறார்கள்: என்னுடைய தந்தையின் சகோதரர் ஹஸ்ரத் ஆமிர் பின் அக்வஃ (ரலி) அவர்கள் தம் கைகளாலேயே ஷஹீதாகி போனார்கள். அப்போது சில ஸஹாபிகள், ஆமிருடைய செயல்களோ வீணாகி விட்டன என்று கூற ஆரம்பித்தனர்.

ஹஸ்ரத் ஸலமா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஆகவே, நான் அழுதவாறு பெருமானார் (ஸல்) அவர்களிடம் சென்றேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! ஆமிருடைய செயல்கள் வீணாகி விட்டனவா என்று கேட்டேன். அதற்கு, யார் அவ்வாறு கூறியது? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். தங்களுடைய சில ஸஹாபிகள் இவ்வாறு கூறினார்கள் என்றேன். எவர் இதை கூறினாரோ அவர் தவறாக கூறியுள்ளார். அவருக்காக இரு கூலிகள் உள்ளன என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். தம் இரு விரல்களை ஒன்று சேர்த்து காட்டினார்கள். அதாவது இரண்டு என்ற எண்ணிக்கையை காட்டினார்கள். அவர் பெரும் ஜிஹாதியாக இருந்தார். அவரைப் போன்று குறைவானவர்கள்தான் அரேபியாவில் இந்த பூமியில் நடமாடி இருப்பார்கள் என்றார்கள்.

ஓர் அறிவிப்பில் அவரைப் போன்று குறைவானவர்கள்தான் இந்த பூமியில் நடமாடி இருப்பார்கள் என்பதற்கு பதிலாக, அவரைப் போன்று இந்த பூமியில் குறைவானவர்கள்தான் பிறந்திருப்பார்கள் என்று வந்துள்ளது. அதாவது ஆமிரைப் போன்ற ஒருவர் அரேபியாவில் பிறந்திருக்க மாட்டார் என்றார்கள். அவர் இரு கூலிகளை பெற்றுக் கொண்டார். அவருக்கு கூலி கிடைக்கவில்லை என்று கூறுபவர்கள் தவறாக கூறுகிறார்கள் என்றார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் ரஜீஃ எனும் இடத்திலேயே தங்கி இருந்தார்கள். அங்கிருந்து கொண்டே நாயிம் கோட்டையை வெற்றிக் கொள்வதற்காக தொடர்ச்சியாக 10 நாட்கள் வரை ஸஹாபிகளை அனுப்பிக் கொண்டிருந்தார்கள்.

இந்தத் தொடர் தோல்விகள், ஸஹாபிகள் காயம் அடைந்தது மற்றும் இரு ஸஹாபிகள் ஷஹீதானது ஆகியவற்றால் யூதர்களின் துணிவு இன்னும் அதிகரித்திருந்தது.

இது புகாரியுடைய அறிவிப்பாகும். ஹஸ்ரத் புரைதா (ரலி) அறிவிக்கின்றார்கள்:

நாளை வெற்றி கிடைத்து விடும் என்று நாங்கள் மகிழ்ச்சியுடன் அந்த இரவைக் கழித்தோம். நாளை யாருக்கு கொடி வழங்கப்படும்? என்று யோசித்தவாறே மக்கள் இரவைக் கழித்தார்கள். காலை விடிந்த போது அனைத்து மக்களும் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் வந்தார்கள். ஒவ்வொரு நபரும் கொடி தமக்கு கொடுக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்ப்பும் விருப்பமும் வைத்திருந்தார்.

நான் அன்றைய தினத்திற்கு முன்பு ஒருபோதும் தலைமைத்துவத்தை விரும்பியது கிடையாது என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்.

ஹஸ்ரத் புரைதா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: எங்களில் எவரும் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் எந்த ஒரு தகுதியைப் பெறுவதற்காகவும் விருப்பப்பட்டது கிடையாது! ஆனால், ஒவ்வொரு நபரும் அன்று அந்தக் கொடி தமக்கு வழங்கப்பட வேண்டும் என்று விரும்பிக் கொண்டிருந்தார். எந்த அளவுக்கு என்றால், ஒருவேளை எனக்கு கொடி கொடுக்கப்படலாம் என்று எண்ணி நான் குதிகால்களை உயர்த்தி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

ஹஸ்ரத் ஸலமா மற்றும் ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) ஆகியோர் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களை விட்டு பின்தங்கி போயிருந்தார்கள். ஃஹைபர் பயணத்தின் போது நோயின் காரணமாக அவர்கள் உடன் இருக்கவில்லை. ஆனால் பிறகு நிம்மதி இழந்து வந்து சேர்ந்தார்கள். ஏனெனில், அவர்களின் கண்களில் கடும் வலி இருந்தது. அதன் காரணமாக அவர்களுக்கு பார்வை தெரியாமல் இருந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் ஃஹைபருக்கு புறப்பட்டபோது, நான் அன்னாரை விட்டு பின்தங்கி விட வேண்டுமா? இது எவ்வாறு சாத்தியமாகும்? என்று ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் நினைத்தார்கள். ஆகவே, புறப்பட்டு வந்தார்கள். எந்த அளவுக்கு என்றால் அன்னாருடன் சேர்ந்து விட்டார்கள்.

ஹஸ்ரத் புரைதா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: காலை விடிந்த போது, பெருமானார் (ஸல்) அவர்கள் காலை தொழுகையை தொழ வைத்தார்கள். பிறகு கொடியை கொண்டு வர செய்தார்கள்; எழுந்து நின்று மக்களுக்கு அறிவுரை கூறினார்கள். பிறகு, அலீ எங்கே? என்று கேட்டார்கள். அலீயுடைய கண்ணில் வலி உள்ளது என்று ஸஹாபிகள் கூறினார்கள். அலீயை அழையுங்கள் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். ஹஸ்ரத் ஸலமா (ரலி) கூறுகின்றார்கள்: நான் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை அழைத்து வந்தேன். என்னவாயிற்று? என்று ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் அன்னார் (ஸல்) கேட்டார்கள். எனது கண்களில் வலி உள்ளது; எந்த அளவுக்கு என்றால், முன்னால் உள்ள பொருட்களை கூட என்னால் பார்க்க முடியவில்லை என்று ஹஸ்ரத் அலீ (ரலி) கூறினார்கள். எனக்கு அருகில் வாருங்கள் என்ற அன்னார் (ரலி)கூறினார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) கூறுகிறார்கள்: என்னுடைய தலையை அன்னார்

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

(ஸல்) தம் மடியில் வைத்தார்கள். பிறகு, தன் கைகளில் உமிழ் நீரை எடுத்து எனது கண்களில் தடவினார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் எந்த அளவு குணமாகி விட்டார்கள் என்றால், அவர்களின் கண்களில் அதற்குப் பிறகு ஒருபோதும் எந்த வலியும் இருக்கவில்லை. பிறகு மரணம் வரையிலும் அவர்களின் கண்களில் எந்த துன்பமும் ஏற்படவில்லை. பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்காக துஆ செய்து அவர்களிடம் கொடியை ஒப்படைத்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் இந்த சம்பவத்தை எடுத்துரைத்திருக்கின்றார்கள். அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்:

ஃகைபர் நாளில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கு வாய்ப்பு கிடைத்தது: எவர் இறைவனை நேசிக்கிறாரோ, மேலும் இறைவன் எவரை நேசிக்கிறானோ அவருக்கு நான் வாய்ப்பு கொடுப்பேன். எவருக்கு அல்லாஹ் மேன்மையை வழங்கி இருக்கின்றானோ அவரிடத்தில் நான் வாளை ஒப்படைப்பேன் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் அந்த சபையில் இருந்தேன். அன்னார் (ஸல்) என்னைப் பார்க்கட்டும்; எனக்கு அந்த வாய்ப்பை கொடுக்கட்டும் என்று நான் எனது தலையை உயர்த்தி பார்த்தேன். ஆனால், அன்னார் (ஸல்) என்னைப் பார்த்தார்கள்; அமைதியாக இருந்தார்கள். பிறகு நான் மீண்டும் எனது தலையை உயர்த்திக் காட்டினேன். பிறகு அன்னார் (ஸல்) மீண்டும் என்னைப் பார்த்தார்கள். அமைதியாக இருந்தார்கள். எந்த அளவுக்கு என்றால், ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் வந்தார்கள். அவர்களின் கண்களில் கடுமையான வலி இருந்தது. அலீயே முன்னால் வாருங்கள் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அன்னாரிடம் சென்றபோது, அன்னார் (ஸல்) உமிழ் நீரை அவர்கள் கண்களில் தடவினார்கள். அல்லாஹ் உமது கண்களுக்கு குணத்தை வழங்குவானாக! என்று கூறியவாறு, இந்த வாளை பிடியுங்கள்; இதை அல்லாஹ் உம்மிடத்தில் ஒப்படைத்துள்ளான் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இன்னோரிடத்தில் இவ்வாறு எழுதி இருக்கின்றார்கள். அன்னார் (ரலி) கூறுகிறார்கள்:

ஒரு நாள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் இறைவன், இந்த நகரத்தின் வெற்றி ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் கையில் விதிக்கப்பட்டுள்ளது என்று கூறினான். அன்னார் (ஸல்) காலை நேரத்தில் ஓர் அறிவிப்பு செய்தார்கள். எவரை இறைவனும், அவருடைய தூதரும் முஸ்லிம்களும் நேசிக்கிறார்களோ அவருடைய கையில் நான் இஸ்லாத்தின் கருப்புக் கொடியை கொடுப்பேன். இந்த கோட்டையின் வெற்றியை இறைவன் அவருடைய கையில் நிர்ணயித்திருக்கின்றான் என்றார்கள். அதற்குப் பிறகு அடுத்த நாள் காலையில் அன்னார் (ஸல்) ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை அழைத்தார்கள். அவர்களின் கைகளில் கொடியை ஒப்படைத்தார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஸஹாபிகளின் படையை அழைத்துக் கொண்டு கோட்டை மீது தாக்குதல் தொடுத்தார்கள். யூதர்கள் கோட்டையை அடைத்துக் கொண்டு உள்ளே இருந்தாலும் அல்லாஹ் அந்நாளில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் மற்றும் ஸஹாபிகளுக்கு எவ்வாறான ஆற்றலை வழங்கினான் என்றால், மாலை நேரம் ஆவதற்கு முன்பே கோட்டை வெற்றிக் கொள்ளப்பட்டது. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கொடியை எடுத்துக் கொண்டு ஓடிச் சென்று அந்த கோட்டையை அடைந்தார்கள். கற்களுக்கு நடுவில் அந்த கொடியை நிற்க வைத்தார்கள்.

எதிரிகள் கொல்லப்பட்டது தொடர்பாகவும் குறிப்புகள் காணக் கிடைக்கின்றன. ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். யூத கோட்டைகளில் அனைத்தையும் விட முதலில் மார்ஹபுடைய சகோதரன் ஹாரிஸ் என்பவன் ஒற்றைக்கு ஒற்றையாக சண்டைக்காக வெளியே வந்தான். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அவனைக் கொன்று விட்டபோது, ஹாரிஸுடைய கூட்டாளிகள் கோட்டைக்கு திரும்பிச் சென்று விட்டார்கள். பிறகு யூத தளபதி ஆமிர் கொல்லப்பட்டான். ஆமிர் என்பவன் ஒற்றைக்கு ஒற்றை சண்டைக்கு வெளியே வந்தான். அவன் பருமனான உடலை கொண்டிருந்தான். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அவனை எதிர்கொள்ள புறப்பட்டார்கள். அவனுக்கு பல காயங்களை ஏற்படுத்தினார்கள். ஆனால், எந்த காயமும் பயன் அளிக்கவில்லை. பிறகு ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அவனுடைய கால் கன்றில் தாக்கினார்கள். அப்போது அவன் உட்கார்ந்து விட்டான். அன்னார் (ரலி) அவனை கொன்று அவனுடைய ஆயுதங்களை எடுத்துக் கொண்டார்கள். அதே போன்று யூத தளபதி உஸைர் என்பவன் கொல்லப்பட்ட சம்பவமும் வருகிறது. இன்னொரு யூத தளபதி உஸைர் என்பவன் சண்டைக்கு அறைகூவல் விடுத்தவாறு வெளியே வந்தான். முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்கள் அவனை எதிர்கொள்வதற்காக சென்றார்கள். அவனை கொன்றார்கள். மார்ஹபுடைய சகோதரன் யஸாசர் கொலை செய்யப்பட்ட சம்பவம் வருகிறது. இப்னு இஸ்ஹாக் அவர்கள் எழுதியிருப்பதாவது: பிறகு, யஸார் வெளியே வந்தான். அவன் மார்ஹபுடைய சகோதரனாவான். அவன் வீர கவிதைகளை பாடிக் கொண்டிருந்தான்.

முஹம்மது பின் உமர் கூறுகிறார்கள்: இவன் அவர்கள் அனைவரையும் விடவும் அதிக உறுதியானவனாக இருந்தான். இவனிடத்தில் போர் ஆயுதங்களும் இருந்தன. அதன் மூலமாக மக்களை இவன் அழித்து வந்தான். அவனுக்கு எதிராக ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் புறப்பட்டார்கள். அப்போது ஹஸ்ரத் ஸுபைர் பின் அவ்வாம் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம், நான் இறைவனின் மீது ஆணையிட்டு கூறுகிறேன்; தாங்கள் எனக்கும் அவனுக்கும் இடையில் தடையாக இருக்க வேண்டாம் என்றார்கள். அதாவது, நான் அவனுடன் சண்டை இடுகிறேன் என்றார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் பின்னால் வந்து விட்டார்கள். ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்கள் அந்த காஃபிரை நோக்கி சென்றார்கள். அப்போது, ஹஸ்ரத் ஸுபைரின் (ரலி) அவர்களின் தாயார் ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அவன் என் மகனை கொன்று விடுவான் என்றார்கள். அதற்கு, பெருமானார் (ஸல்) அவர்கள் தங்களுடைய மகன் இன்ஷா அல்லாஹ் அவனை கொன்று விடுவார் என்று கூறினார்கள். ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்கள் அவனை நோக்கி சென்றார்கள். சில கவிதை வரிகளை கூறினார்கள். பிறகு இருவருக்கும் இடையில் சண்டை ஆரம்பித்தது. ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்கள் அவனை கொன்றார்கள். பிறகு அந்தக் கோட்டையில் இருந்து ஃகைபருடைய மிகப் பெரும் வீரனும், போர் வீரனுமான மார்ஹப் தம் ஆயுதங்களை ஏந்தியவாறு வெளியே வந்தான். அவன் கவிதைகளை கூற ஆரம்பித்தான்.

قَدْ عَلِمَتْ خَيْبَرُ اَنِّیْ مَرْحَبُ
شَاكِى السِّلَاحِ بَطَلٌ مُجَرَّبُ
اِذَا الْحُرُوبُ اَقْبَلَتْ تُلَهَّبُ

அதாவது, நானே மார்ஹப், இது ஃகைபருக்குத் தெரியும். போர் உக்கிரமானால் நான் ஆயுதம் ஏந்திய, அனுபவமிக்க வீரனாவேன் என்று கூறினான். அவனுக்கு எதிராக ஹஸ்ரத் அலீ பின் அபீ தாலிப் (ரலி) அவர்கள் புறப்பட்டார்கள். அவர்கள் சிவப்பு நிறத்திலான ஒரு மேலங்கியை அணிந்திருந்தார்கள். அவர்கள் வாளை வெளியே எடுத்தார்கள்.

أَنَا الَّذِی سَمَّتْنِی أُمِّی حَیْدَرَہْ
كَلَيْثِ غَابَاتٍ كَرِيْهِ الْمَنْظَرَہْ
اُوفِيْهِمْ بِالصَّاعِ كَيْلَ السَّنْدَرَہْ

என்ற இந்த கவிதை வரிகளைக் கூறினார்கள்.

அதாவது, என் அன்னை எனக்கு சிங்கமென பெயர் சூட்டினாள். காண அஞ்சும் கானகத்தில் சீறும் சிங்கத்தைப் போன்றவன் நான் இன்று நீ தருவதைக் காட்டிலும் அதிகமாக பதிலடி தருவேன் என்றார்கள்.

இது ஒரு சொல் வழக்காகும். அதனுடைய பொருள், கேட்பதை விட அதிகமாக கொடுப்பது அல்லது எதிராளியைக் காட்டிலும் கடுமையாக பதிலடி தருவது என்பதாகும். அந்த கவிதையில் சந்திரா என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதனுடைய பொருள், பெரிய அளவில் கொடுப்பது என்பதாகும். அறிவிப்பாளர் கூறுகிறார்: ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் மார்ஹபுடைய தலையில் தாக்கி அவனை கொன்றார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் கைகளில் வெற்றி கிடைத்தது.

இன்னோர் அறிவிப்பில் வருகிறது: ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கும் மார்ஹபுக்கும் இடையிலும் சண்டை நடைபெற்றது. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் முன்னேறிச் சென்று மார்ஹபை தாக்கினார்கள். அது அவனுடைய தலை கவசத்தையும் தலையையும் வெட்டியவாறு பல் வரை வந்து விட்டது. பிறகு, மக்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுடன் புறப்பட்டு சென்றார்கள். எந்த அளவுக்கு என்றால், கோட்டை வெற்றி கொள்ளப்பட்டது.

முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்கள் மார்ஹபை கொன்றார்கள் என்றும், சில வாழ்க்கை வரலாற்று ஆசிரியர்கள் எடுத்துரைக்கின்றார்கள். உதாரணமாக, ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்களிடம் இருந்து அறிவிக்கப்பட்டுள்ளது. மார்ஹப் தன் ஆயுதங்களை அணிந்து கொண்டு சண்டையிட வருமாறு அழைப்பு கொடுத்தவாறு கோட்டையை விட்டு வெளியே வந்தான். அப்போது அவன் வீரத்தை பறைசாற்றும் கவிதைகளை பாடிக் கொண்டிருந்தான். இவனை யார்? எதிர்கொள்வார்கள் என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் அவனை எதிர்கொள்கிறேன்; அல்லாஹ்வின் மீது ஆணையாக! நேற்று இவன் என்னுடைய சகோதரனை கொன்று விட்டான். என்று ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா கூறினார்கள். அவனுடன் சண்டையிடுவதற்காக எழுந்து செல்லுங்கள்; அல்லாஹ்வே! இவருக்கு உதவி செய்வாயாக! என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். அறிவிப்பில் வருகிறது: இருவரும் சண்டையிடுவதற்காக ஒருவரை ஒருவர் நெருங்கிய போது, அவ்விருக்கும் இடையில் ஒரு பழைய மரம் வந்து விட்டது. ஒருவரை ஒருவர்



**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 10 THU 27 MARCH 2025 Issue No 13

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

மரத்துக்குப் பின்னால் தம்மை மறைத்துக் கொள்ளும்போது, மற்றொருவரால் அந்த மரத்தின் ஏதேனும் ஒரு பகுதி வெட்டப்பட்டு கொண்டிருந்தது. எந்த அளவுக்கு என்றால் அந்த இருவரும் ஒருவரை ஒருவர் நேரடியாக எதிர்கொண்டார்கள். மர்ஹப், ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்கள் மீது வாளைக் கொண்டு தாக்கியபோது, அவர்கள் கேடயத்தால் தம்மை காப்பாற்றிக் கொண்டார்கள். மர்ஹபுடைய வாள் கேடயத்தில் சிக்கிக் கொண்டது. அது கேடயத்தை வெட்டி இருந்தது. ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்கள் அவன் மீது வாளை வீசி அவனை கொன்றார்கள்.

ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவனை தாக்கினார்கள்; அவனுடைய கால்களை வெட்டினார்கள். அப்போது அவன் கீழே விழுந்து விட்டான். பிறகு ஹஸ்ரத் அலீ (ரலி) அங்கு வந்தார்கள். அவனை கொன்றார்கள் என்றும் ஓர் அறிவிப்பில் வருகிறது.

புகாரியின் விரிவுரையாளரான ஹாஃபிழ் இப்னு ஹஜர் அவர்கள் எழுதியிருப்பதாவது, இப்னு இஸ்ஹாக், மூஸா பின் உக்பா, வாக்தீ மற்றும் பல வரலாற்று ஆசிரியர்கள் மர்ஹபை முஹம்மத் பின் மஸ்லமா (ரலி) அவர்கள் கொன்றதாக எழுதியிருக்கின்றார்கள். முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்கள் மர்ஹபுடைய சகோதரன் ஹாரிஸை கொன்றார்கள். ஆனால், சில அறிவிப்பாளர்களுக்கு சந்தேகம் எழுந்து விட்டது. அவர்கள் ஹாரிஸுக்கு பதிலாக மர்ஹபுடைய பெயரை எழுதியுள்ளார்கள்.

இந்த விவகாரம் இவ்வாறு இல்லை என்றால், பிறகு ஸஹீஹ் முஸ்லிமில் வருவது மற்றவற்றை விட எவ்வகையிலும் முன்னுரிமை பெற்றதாக இருக்கிறது. ஸஹீஹ் முஸ்லிமில், ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் மர்ஹபை கொன்றார்கள் என்ற ஹதீஸ் ஸலமா பின் அக்வஃ அவர்களிடமிருந்து அறிவிக்கப்பட்டுள்ளது. ஸஹீஹ் முஸ்லிமுடைய அறிவிப்பு இரு வகையில் முன்னுரிமை பெற்றுள்ளது. முதல் விஷயம், அறிவிப்பாளர்களின் தொடரை பொருத்த வரை அது சரியானதாகும். இரண்டாவது விஷயம், ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் ஃகைபர் போரில் கலந்து கொள்ளவே இல்லை. அவர்கள்தான் முஹம்மத் பின் மஸ்லமா தொடர்பாக அறிவித்துள்ளார்கள். இது தொடர்பாக இன்னொரு விஷயத்தையும் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். மர்ஹப் மற்றும் அவனுடன் இருந்த மற்ற யூதர்கள் ஒற்றைக்கு ஒற்றை சண்டைக்கு அழைத்தது, அவர்கள் கொல்லப்பட்டது போன்ற சம்பவங்கள் தொடர்பாக கூறப்படும்போது வரலாற்று நூல்களிலும் வாழ்க்கை வரலாறு நூல்களிலும் அந்த சண்டை எந்த கோட்டையில் நடந்தது என்பதை குறித்து கருத்து வேறுபாடு காணப்படுகிறது.

புகாரீ, முஸ்லிம், ஸிஹாஹ் ஸித்தா போன்றவற்றில் எந்தவொரு கோட்டையின் பெயரும் குறிப்பிடப்படவில்லை. அதே போன்று சில வாழ்க்கை வரலாறு நூல்களிலும் இந்த சம்பவங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால், எந்த ஒரு கோட்டையையும் குறிப்பிட்டு கூறப்படவில்லை. உதாரணமாக, ஸீரத் இப்னு ஹிஷாம், தபாகத் இப்னு ஸஅத், ஷரஹ் ஸுர்கானீ போன்றவை. ஆயினும், சில நூல்களில் காமோஸ் கோட்டை தொடர்பாக இந்த சம்பவங்கள் கூறப்பட்டுள்ளன. சிலவற்றில் நாயிம் கோட்டை தொடர்பாக கூறப்பட்டுள்ளது. எவ்வாறு இருப்பினும், ஒன்பது நாட்கள் வரை பெருமானார் (ஸல்) அவர்களும், முஸ்லிம்களும் சேர்ந்து கொண்டு இந்த கோட்டையை தாக்கிக் கொண்டிருந்தார்கள். எந்த அளவுக்கு என்றால், பத்தாவது நாள் அல்லாஹ் முஸ்லிம்களுக்கு வெற்றியை வழங்கினான்.

ஃகைபருடைய மிகவும் உறுதி வாய்ந்த கோட்டையாக இருந்த நாயிம் கோட்டையை முஸ்லிம்கள் கைப்பற்றியது தொடர்பாக வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடும்போது அந்த கோட்டையை வெற்றி கொள்ளும் போது முஸ்லிம்களுக்கு எந்த அளவு போர்ச் செல்வம் கிடைத்தது! எந்த அளவு ஆயுதங்களை கைப்பற்றினார்கள் என்று குறிப்பிடவில்லை! குறிப்பிடும் அளவுக்கு முஸ்லிம்களுக்கு எந்த ஒரு பொருளுமே கிடைக்காமலும் இருந்திருக்கலாம். ஏனெனில், யூதர்கள் அவசர சூழ்நிலையை கருத்தில் கொண்டு பெண்களையும், குழந்தைகளையும் முன்பே மற்ற கோட்டைகளுக்கு மாற்றி இருந்தார்கள். யூதர்கள் தோல்வி அடைந்தபோது நாயிம் கோட்டையை முஸ்லிம்கள் தாக்காமல் தடுக்க முடியாமல் போனபோது அவர்களும் மிக எளிதாக ஸஅப் பின் முஆஸ் எனும் கோட்டைக்கு மாறிச் சென்று விட்டார்கள். நாயிம் கோட்டையில் போர் நடைபெற்ற போது எந்த ஓர் யூதனும் முஸ்லிம்களின் கையில் சிக்கவில்லை.

இந்த விபரங்கள் இன்னும் உள்ளன. இனி வரும் காலத்தில் மற்ற கோட்டைகளின் சம்பவங்கள் எடுத்துக் கூறப்படும். இன்ஷா அல்லாஹ்!

உலகின் சூழ்நிலைகளைக் குறித்தும் முஸ்லிம்களின் சூழ்நிலைகளைக் குறித்தும் நான் துஆவுக்காக கூறிவருவது போன்று பாலஸ்தீனர்களுக்காக குறிப்பாகவும், முஸ்லிம்களுக்காக பொதுவாகவும் அதிகமாக துஆ செய்யுங்கள். போர் நிறுத்தம் செய்யப்பட்டு விட்டது என்று மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளார்கள். வெளிப்படையில் பார்க்கும் போது நிலைமைகள் மேம்பட்டு விடும் என்பது போல் தெரிகிறது. ஆனால், நிலைமையோ முற்றிலும் மோசமாகிக் கொண்டே செல்கிறது. புதிய அமெரிக்க அதிபருடைய செயல்திட்டம் மற்றும் கொள்கைகளும் அநீதியின் மற்றொரு உச்சமாக உள்ளது. முதலில், இவர்கள் நம்முடைய நாட்டிற்கு மிகவும் அபாயகரமானவர்கள் என்று அமெரிக்கர்கள் கூறி வந்தார்கள். வியாபாரத்தில் தலையிட மாட்டோம் என்று கூறினார்கள். ஆனால், இப்பொழுது இம்மக்கள் முழு உலகிற்கும் அபாயகரமானவர்கள் ஆகிவிட்டார்களா என்ன!

அல்லாஹ் பாலஸ்தீனர்கள் மீது கருணை காட்டுவானாக! உலகின் மீது கருணை காட்டுவானாக! இம்மக்கள் அவர்களை விட்டு தப்பித்திருக்கட்டுமாக! அரபு நாடுகள் இப்பொழுதாவது தம் கண்ணை திறக்க வேண்டும்; ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு முயற்சிக்க வேண்டும். அது அல்லாமல் வேறு வழியொன்றும் இல்லை. இல்லையென்றால், பாலஸ்தீனர்கள் மட்டுமின்றி மீதம் இருக்கின்ற அரபு நாடுகளும் கடும் கஷ்டத்தை எதிர்கொள்ள வேண்டியது வரும். இப்பொழுது சில முஸ்லிம் அல்லாதவர்கள் சார்பாகவும் பாலஸ்தீனர்களுக்கு சாதகமாக அநீதிக்கு எதிராக குரல்கள் எழும்ப தொடங்கியிருக்கின்றன. ஆனால், வல்லரசு இப்பொழுது முழுமையாக தம் ஆற்றலின் மிதப்பில் இருக்கிறது. யாருடைய பேச்சையும் கேட்க விரும்பவில்லை.

ஆகவே முஸ்லிம்கள் மிக அதிகமாக கவனம் செலுத்த வேண்டிய தேவை உள்ளது; அவர்களுக்காக நாம் துஆக்கள் செய்ய வேண்டிய தேவை உள்ளது. நம்மிடத்தில் (இதைத் தவிர) வேறு எந்த ஆற்றலும் கிடையாதே!

அதேபோன்று பாகிஸ்தானுடைய அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். சில சமயங்களில் எதிர்ப்புகளில் அவர்களின் சூழ்நிலையும் மிக அதிக கடுமையானதாக ஆகி விடுகின்றன. வங்காளதேசத்தின் அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அங்கும் அல்லாஹ் அவர்களை எல்லாவிதமான எதிர்ப்புகளில் இருந்தும், தாக்குதல்களிலிருந்தும் காப்பாற்றுவானாக. மற்ற இடங்களில் உள்ள அநீதிக்குள்ளான மக்களுக்காகவும் துஆ செய்யுங்கள். அநீதிக்குள்ளான அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்கள் அனைவரையும் தனது பாதுகாப்பிலும், அடைக்கலத்திலும் வைப்பானாக! உலகிற்கு அறிவை கொடுப்பானாக! அமைதியை ஏற்படுத்துவதன் பக்கம் அவர்கள் அனைவருக்கும் கவனம் பிறக்கட்டுமாக! அல்லாஹ் நமக்கு துஆக்களுக்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

தமிழாக்கம்

மவ்லவி
A.P.A தாரிக் அஹ்மது

* * * * *

**National Watch Company**
**Sales & Service**

**B. Mohamed Adil**
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT
99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad